486

சித்ரபாநு ஹு
ஆடி - ஆவணி மீ

ஸம்புடம் - 1
ஸஞ்சிகை - 8

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

(ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை)

486.

11 SEP 1942
MADRAS

ஸம்பாதகர்: ஸ்ரீ. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

இராமசாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

August, 1942
Vol. 1, No. 8

JL
Q22...,N41
N42.1.8.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	தேவாலய தர்மம்	256
2.	ஆண்டாள் வைபவம்	263
3.	வைஷ்ணவி விஜயம்	271
4.	மதிப்புரை	277
5.	ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் விஷயமான அந்தாதியின் பதவுரை	278
6.	செய்திகள்	283
7.	காரயித்ருத்வ நிரூபணம்	288
8.	ஸம்பாதகரின் குறிப்புகள்	292
9.	ஈஶாவாஸ்யோபநிஷத்	9

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப் பட்டிருக்கும் பக்ஷத்தில், உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன், வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இ[illegible]க்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைக[illegible]ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	சித்திரபாநு ௵ ஆடி - ஆவணி ௴	ஸஞ்சிகை 8

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥

OF THE REGISTRAR OF ...
11 SEP 1942
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ருஸிம்ஹகாருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

தேவாலய தர்மம்

[ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வாந்
ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.]

[ஸஞ்சிகை 7 : பக்கம் - 232 தொடர்ச்சி]

"𑌨𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾𑌲𑌯𑍇 𑌕𑍃𑌤𑍇 𑌜𑍀𑌰𑍍𑌣𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍇𑌽𑌥𑌵𑌾𑌪𑌿 ।
𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌕𑍃𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌾𑌵𑌦𑍇𑌤𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥"

(பாத்ம ஸம்ஹிதை)

[ஜீர்ணமாய்ப்போன தேவாலயத்தைப் புதிதாகக் கட்டி ப்ரதிஷ்டை செய்வதற்கும், ஆலயமில்லாத விடத்தில் புதிதாக ஆலயத்தைக் கட்டி ப்ரதிஷ்டை செய்வதற்கும், பலத்தில் வித்யாஸமில்லை. இரண்டு விதங்களான ஆலய நிர்மாணத்திற்கும் பலம் ஸமாநமே. இந்த விஷயத்தில் ஸந்தேஹிக்க வேண்டா.]

"𑌯𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑍇𑌨 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌯𑌾𑌦𑍃𑌶𑍇𑌨𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌾 ।
𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌕𑍃𑌤𑍇 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌕𑍃𑌤𑍇 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥"

[ஜீர்ணமாய்ப்போன ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தால் பழைய தேவாலயத்தில் எந்த ப்ரதிமையானது எந்த சாஸ்த்ரத்தின் விதியை அநுஸரித்து எந்த அதிகாரியினுல் (அதாவது : மந்த்ரம் மந்த்ராந்தரம் முதலிய ஸம்ஹிதைகளுடைய பேதங்களினுல் தீக்ஷிதனுன அர்ச்சகனுல்) என்னபடி) முன்பு ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததோ, அதே ப்ரதிமையை அந்த சாஸ்த்ர க்ரமத்தையே அநுஸரித்து அந்த தந்த்ரத்தில் தீக்ஷையையுடைய அர்ச்சகனைக்கொண்டே மறுபடியும் ஆலய நிர்மாணத்தைச் செய்யவேண்டும். ப்ரதிமைகளையோ, மந்த்ரங்களையோ, அர்ச்சகர்களையோ முன்பிருந்த க்ரமத்திற்கு மாறுதலாகச் செய்யக் கூடாது]

"𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌶𑌕𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌤𑍍𑌯𑌯𑍇 𑌕𑍃𑌤𑍇 𑌪𑍁𑌨𑌃 ।
𑌨𑍃𑌣𑌾𑌂 𑌨𑌾𑌶𑌶𑍍𑌚 𑌦𑍇𑌶𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌕𑍍𑌷𑌯𑌃 ॥"

[பழைய தேவாலயத்தைப் புதியதாகக் கட்டுகிறவன் தேவதா ப்ரதிமையையோ மந்த்ரங்கள் முதலியவற்றையோ அர்ச்சகனையோ முன்பிருந்த விதத்திற்கு வேறுவிதமாகச் செய்தால், அத்தேசவாஸிகளான மனிதர்களுக்கும் அத்தேசத்தரசனுக்கும் ராஜ்யத்திற்கும் நாசம் ஸம்பவிக்கும். ஆதலால் அவைகளை முன்பிருந்தபடியே செய்யவேண்டும்.]

தேவாலயங்களில் செய்யப்படவேண்டிய காயர்ங்கள்

இக்காலத்தில்தேவாலயங்களி லிருக்கும் தர்மகர்த்தாக்கள் பெரும் பாலும் தேவாலய ஸம்பந்தமான பணங்களின் வரவு செலவுகளை மட்டும் கவனிக்கிறார்களேயல்லது, தேவாலயங்களில் தேவதையினுடைய ஸாந் நித்யத்தின் அபிவ்ருத்திக்குக் காரணங்களைப் பற்றிக் கடுகளவும் கவனிப் பதில்லை. இப்படி அநுகூல கார்யங்களைச் செய்யாததோடு, சிலர் தேவதாஸாந்நித்யத்திற்குப் பாதகங்களான கார்யங்களையும் செய்கிறார் கள். இதுவும் ஓர் ஆச்சர்யமே. வைகாநஸம் பாஞ்சராத்ரம் முதலிய எந்த க்ரந்தங்களைக்கொண்டு தேவாலயத்தைக் கட்டவும், அதில் விக்ர ஹத்தில் ஸர்வேஶ்வரனை ப்ரதிஷ்டை செய்யவும், உத்ஸவாதிகளை நடத்த வும், நித்ய பூஜைகளைச் செய்யவும் உத்ஸாஹத்துடன் ப்ரவர்த்திக்கிறார் களோ, அந்த விஷயங்களில் மட்டும் அந்த வைகாநஸ பாஞ்ராத்ர க்ரந்தங்கள் ப்ரமாண மென்கிறார்கள். தீண்டாதஜாதிகள் தேவாலயத் திற்குள் புகக்கூடாதென்று அந்த சாஸ்த்ரங்களே சொல்லுமானால், அந்த வாக்யம் ப்ரமாணமல்ல என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத் தைப்பற்றி பிறகு விஸ்தாரமாக விசாரிப்போம்.

ஆகையினால் தேவாலயங்களில் தேவதையின் ஸாந்நித்ய மிருந்தா லல்லது தர்மகர்த்தாக்களுக்கு வேண்டியதான த்ரவ்ய லாபமும் ஸம்ப விக்காதாகையினால், ஷ தேவதா ஸாந்நித்யத்திற்கும் அதினுடைய அபிவிருத்திக்கும் காரணங்களான யந்த்ர ஸ்தாபநம், மந்த்ரங்களி னுடைய ஜபம், நித்ய நைமித்திகங்களான திருவாராதநம், வேத பாராயணம், அர்ச்சனை, இதிஹாஸ புராணங்களுடைய படநங்கள் முதலியவைகளைப் பக்தியுடனும் ஶ்ரத்தையுடனும் செய்விக்க வேண்டி யது தர்மகர்த்தாக்களினுடைய முக்யமான கடமையாகும். இம் மாதிரியான தர்ம கார்யங்களைச் செய்விப்பதற்காகவே தர்மகர்த்தா வென்கிற பெயர் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தென்பதை அவர்கள் நன்கு கவனிக்க வேண்டும். கேவலம் த்ரவ்ய ஸம்பந்தமான கார்யங்களை மட்டும் கவனிக்குமவர்களுக்குத் தர்மகர்த்தா வென்கிற பெயர் பொருந்தா தென்பதை யாவரு மறிந்திருக்கலாம். இம்மாதிரியான தர்மங்களை அநுஷ்டிக்க தங்கள் தங்கள் வர்ணாஶ்ரம தர்மங்களை அநுஷ்டிக்குமவர் களுக்கும் கெட்ட கார்யங்களைச் செய்யாதவர்களுக்கும்தான் யோக்யதை உண்டென்பதை முன்பே சொன்னோம். இதுபோலவே மற்றும் தேவா லயங்களில் கோமயத்தினால் மெழுகுவது, பெருக்குவது, விளக்கேற்று வது, முதலிய நல்ல கார்யங்களைச் செய்வதும், செய்விப்பதும், தர்மா நுஷ்டாந மூலமாகப் பகவத் ஸாந்நித்ய வ்ருத்திக்கு ஹேதுக்களாகும். இவைகளைச் செய்பவர்களுக்கு உண்டாகும் பலன்கள் பல. அவை:—

“ஸம்மார்ஜநம் க்ருஹே விஷ்ணோ: [illegible] |
[illegible] ஸம்ஶய: ||”

[எந்த மனிதன் விஷ்ணுவினுடைய ஆலயத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்கிறுனே, அவன் முன் ஜந்மத்திலும் இந்த ஜந்மத்திலும் செய்த ஸர்வ பாபங்களேயும் போக்கிவிடுகிறுன்.]

“ 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 ”

[தினந்தோறும் தேவாலயத்தைப் பெருக்கிச் சுத்தி செய்தால், அதன் தினந்தோறும் பண்ணுகிற ஸர்வ பாபங்களேயும் போக்கி விடுகிறுன்.]

“ 𑌗𑍋𑌚𑌰𑍍𑌮𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌪𑌿 𑌵𑌾 𑌗𑍋𑌮𑌯𑍇𑌨 𑌚 𑌲𑌿𑌮𑍍𑌪𑌤𑌿 ।
𑌯𑍋 𑌲𑌭𑌤𑍇 𑌸𑌦𑍍𑌯𑍋 𑌗𑍋𑌦𑌾𑌨𑌫𑌲𑌂 𑌨𑌰𑌃 ॥”

[தேவாலயத்தில் எந்த மனிதன் கோசர்மத்தளவு (அதாவது: எட்டடி சதுரம்) பசுவின் சாணியினுல் மெழுகுகிறுனே, அவன் அப்பொழுதே கோதாநம் செய்ததா லுண்டாகும் புண்யத்தை அடைகிறுன்.]

“ 𑌸𑍍𑌰𑌜𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑍁𑌮𑌨𑌸𑌾𑌂 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 ।
𑌸 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌨𑌾𑌕𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌵𑌿𑌰𑌾𑌜𑌤𑍇 ॥”

[எந்த மனிதன் புஷ்பங்களினுல் தொடுத்த மாலையை விஷ்ணுவுக்கு ஸமர்ப்பிக்கிறுனே, அவன் ஸ்வர்க்க லோகத்தில் விஸ்தாரங்களான ஸுகங்களே அநுபவித்துக் கொண்டு விளங்குகிறுன்.]

“ 𑌦𑍀𑌪𑌾𑌨𑌾𑌰𑍋𑌪𑌯𑍇𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌗𑍃𑌹𑍇𑌽𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇 𑌬𑌹𑌿𑌃 ।
𑌦𑌿𑌵𑌿 𑌦𑍇𑌵𑌵𑌦𑌾𑌸𑌿𑌤𑍍𑌵𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌪𑌾𑌰𑌗𑍋 𑌵𑌿𑌦𑌃 ॥”

[எந்த மனிதன் விஷ்ணுவினுடைய ஆலயத்தினுள்ளேயாவது வெளியேயாவது விளக்குகளே ஏற்றி வைக்கிறுனே, அவன் ஸ்வர்க்கத்தில் தேவதையைப்போல ஸுகமாக இருந்துவிட்டுப் பிறகு இவ்வுலகத்தில் அதிகமான தத்வ ஜ்ஞாநியாகப் பிறக்கிறுன்.]

“ 𑌏𑌕𑌾𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌂 𑌦𑍀𑌪𑌮𑌾𑌰𑍋𑌪𑌯𑍇𑌨𑍍𑌨𑌰𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌲𑍋𑌕𑍇 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 ॥”

* [எந்த மனிதன் விஷ்ணுவினுடைய ஆலயத்தில் ஒரு திநம் இரவிலும் பகலிலும் அணேந்து போகாதபடி விளக்கை ஏற்றி வைக்கிறுனே, அவன் ஸர்வ பாபங்களினுலும் விடப்பட்டவனுய் விஷ்ணு லோகத்தில் மிகவும் பூஜிக்கப்படுகிறுன்.

* இங்குத் தேவாலயங்களில் விளக்கேற்றுவதில் ஆமணக்கு எண்ணெய் கூடாதென்பதும், பழைய துணிகளினுடைய திரி கூடாதென்பதும் வேறிடத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

"आराधनाय तुलसीं संवर्धयति यस्तु ।
सुरभीणि च पुष्पाणि दिवि देवैश्च पूज्यते ॥"

[எவன் விஷ்ணுவினுடைய ஆராதநத்திற்காகத் துளஸிச் செடிகளை வளர்க்கிருனே, நல்ல வாஸநையையுடைய புஷ்பங்களை உண்டாக்குகிற புஷ்பச் செடிகளை உண்டாக்குகிருனே, அவன் ஸ்வர்க்க லோகத்தில் எல்லாத் தேவர்களினுலும் பூஜிக்கப்படுகிருன்.]

"उदकाभ्युक्षणं विष्णोरालये विदधाति यः ।
लोकं स वारुणं प्राप्य रमते वत्सरान् बहून् ॥"

[எந்த மனிதன் விஷ்ணுவினுடைய ஆலயத்தில் ஜலத்தைத் தெளிக்கிருனே, அவன் இறந்த பிறகு வருணனுடைய லோகத்தில் அநேக வர்ஷ காலங்களில் ஸர்வாநந்தங்களையும் அநுபவிக்கிருன்.]

"विष्ण्वर्थं कारयेद्भूमिं सर्वसस्यसमृद्धिकाम् ।
सल्लोकानवाप्नोति सर्वानेव न संशयः ॥"

[எந்த மனிதன் விஷ்ணுவினுடைய பூஜார்த்தமாகத் தாந்யம் முதலிய பலங்கள் விளையக்கூடிய பூமியைக் கொடுக்கிருனே, அவன் ஸர்வ விதங்களான ஸ்வர்க்க ஸுகங்களையும் அடைகிருன்; இதில் ஸம்சயமில்லை.]

"वासुदेवाश्रयकथाः प्रब्रुवाणा दिने दिने ।
वासुदेवालये यान्ति वाचस्पत्यमसंशयम् ॥"

[எந்த மனிதர்கள் தேவாலயங்களில் பகவானுடைய கதைகளைத் தினந்தோறும் சொல்லுகிருர்களோ, அவர்கள் ஸ்ரீவைகுண்ட லோகத்தில் ப்ருஹஸ்பதிக்குத் துல்யமான பெருமையை அடைவார்கள். இதில் ஸந்தேஹமில்லை.]

இப்படி, தேவாலயங்களில் மற்றும் பலவிதங்களான தர்மங்களைச் செய்யுமவர்களுக்குப் பலன்கள் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இதைப்போலவே, தேவாலயத்தின் ஸொத்துக்களை அபஹரிப்பவர்களுக்கு உண்டாகும் கஷ்டங்களும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்குக் குறிப்பிடுகிருேம்.

"प्रासादमण्डपादीनां भोक्तारः केवलं हविषः ।
ये दुर्मतयः प्रेत्य निरयेषु निरत्ययाः ॥"

[எந்த மூடர்கள் பகவானுடைய ப்ராஸாதங்களையாவது மண்டபங்களையாவது தங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிருர்களோ,

அவர்கள் இறந்தவுடன் ஶாஶ்வதமான நரக துக்கத்தை அநுபவிப் பார்கள்]

“ வஸந்தி ஸர்வெ நீசாஸு ஜாயந்தெ யொநிஷு த்ருவம் ||”

[பிறகும் அவர்கள் இந்த உலகத்தில் மிகவும் தாழ்ந்த ஜாதியில் நிச்சயமாகப் பிறப்பார்கள்.]

“ ஸ்வர்ணச்சத்ரவஸ்த்ராதி யொ ஹரேத் துர்மதிர்நர: |
கண்டெ நிபத்த: பாஶை: க்ருஷ்யதெ நிரயேஷு ஸ: ||”

[எந்த மனிதன் பகவானுடைய நகைகள் குடைகள் வஸ்த்ரங்கள் முதலிய ஸொத்துக்களை அபஹரிக்கிறானோ, அந்தக் கெட்ட புத்தியுள்ள மனிதன் நரகத்தில் கழுத்தில் பாசக் கயிறுகளினால் கட்டப்பட்டு அங்கு மிங்கும் இழுக்கப்படுகிறான்]

“ கோபூர்ஹிரண்யவஸ்த்ராதி யதநம் விஷ்ணோ: வஸிஷ்ட்ரஹ |
ஶஶ்வத்யெ஽நுபுஞ்ஜந்தி நரகேஷு நிரந்தரா: ||
உஷித்வா தேஷு ஸர்வெ஽பி ஜாயந்தெ ஶ்வாதியொநிஷு |”

[எந்த மனிதர்கள் விஷ்ணுவினுடைய பசு பூமி நகைகள் வஸ்த்ரங்கள் பணங்கள் மற்றும் எந்த ஸொத்துக்களையாவது அநுபவிக்கிறார்களோ, அவர்கள் இறந்தவுடன் ஶாஶ்வதமான நரக துக்கங்களை அநுபவித்து, பிறகும் நாய் நரி முதலிய ஜந்மங்களை அடைகிறார்கள்.]

“ வ்யாயாமோத்வர்தநாப்யங்கஸ்நாநபாநாஶநாதிகம் |
குர்வந்தி மந்திரெ விஷ்ணோ: யெ தெ நிரயகாமிந: ||”

[எவர்கள் விஷ்ணுவினுடைய ஆலயத்தில் அழுக்குத் தேய்ப்பது, எண்ணெய் தேய்த்துக்கொள்வது, ஸ்நாநம் செய்வது, அந்ந பாநீயங் களைச் சாப்பிடுவது, இவைகளைச் செய்கிறார்களோ, அவர்கள் நரகத்தை யடைகிறார்கள்.]

“ வஸந்தெ தத்ர ஸர்வெ஽பி ஜாயந்தெ நீசயொநிஷு ”

[அவர்கள் அந்த நரகங்களில் துக்கங்களை அநுபவித்த பிறகு, தாழ்ந்த ஜாதிகளில் இங்கு வந்து பிறக்கிறார்கள்.]

ஆக : தேவாலயங்களில் செய்யப்படவேண்டிய நல்ல கார்யங் களையும், அங்குச் செய்யக்கூடாத கார்யங்களில் சிலவற்றையும் சொன்னோம்.

இனி, தேவாலயங்களில் எந்தக் கார்யங்கள் ஸம்பவித்தால் தேவா லயத்திற்கு ப்ராயஶ்சித்தம் செய்யவேண்டியதாகுமோ, அவைகளை விட வேண்டிய அவஶ்யமாகையினால், அவற்றுள் சிலவற்றை இங்குக் குறிப் பிடுகிறோம்.

"சண்டாலஸூதிகோதக்யா ஶவாத்யைர்தூஷிதாஸு ச ।
பலிவீதிஷு புண்யாஹபஞ்சகவ்யை: ப்ரோக்ஷயேத் ॥"

(விஷ்ணு ஸம்ஹிதை)

தேவாலயத்தினுடைய பலிபோடுகிற வீதிகளில் சண்டாளன், ப்ரஸவித்த ஸ்த்ரீகள், ஆர்த்தவ ஸ்த்ரீகள் (ருதுஸ்த்ரீகள்), பிணம் இவைகளுடைய ஸம்பந்தம் ஸம்பவித்தால் புண்யாஹ ஜலத்தினாலும் பஞ்ச கவ்யத்தினாலும் ப்ரோக்ஷணம் செய்யவேண்டும்.]

"உதக்யா ஸூதிகாऽபக்ஷ்ய சண்டாலாத்யுபகாதக: ।
ஸ்ப்ருஶேத்தரேர்பிம்பம் ஸ்நாத்வா பஶ்சாத் ஸ்வயம் தத: ।
பஞ்சகவ்யேந தேவேஶமபிஷிச்ய ஸமர்ச்சயேத் ॥"

(பாரமேஶ்வரம்)

[ஆர்த்தவ முடைய ஸ்த்ரீகள், ப்ரஸவித்த ஸ்த்ரீகள், சாப்பிடகூடாததைச் சாப்பிடுமவன், சண்டாளன், இவர்களுக்குள் ஒருவரைத் தொட்டவன், பகவானுடைய விக்ரஹத்தைத் தொட்டுவிட்டால், தான் முதலில் சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறபடி ஸ்நாநம் பண்ணிவிட்டு, பஞ்சகவ்யத்தினால் ஷை விக்ரஹத்தை அபிஷேகம் பண்ணிப் பிறகு பூஜை செய்யவேண்டும்.]

இதனால், சண்டாளன் முதலியவர்களுடைய பரம்பரா ஸம்பந்தத்திற்கும் ப்ராயஶ்சித்தம் சொல்லப்பட்டதாகிறது.

"சண்டாலாத்யை: புல்கஸைஶ்ச பதிதைஸ்ஸுராபைஸ்ததா ।
ப்ரவேஶே நிர்கதாஹ்யங்க: ப்ராஸாதே [illegible] த்யஜேத் ॥"
"தத்ரஸ்தாந் மார்த்திகாந் பாண்டாந் கவாடாதி மஹீதலம் ।
க்ஷிப்த்வா கோமயாம்போபிஸ் ஸம்ப்ரோக்ஷணவிதிம் சரேத் ॥"

(ஈஶ்வர ஸம்ஹிதை)

[தேவாலயத்திற்குள் சண்டாளன், புல்கஸன், பதிதன், கள் குடிப்பவன் இவர்கள் ப்ரவேசித்துவிட்டால், அங்கிருக்கிற மண் பாண்டங்களை எறிந்துவிட்டு, அவ்விடத்துப் பூமியையும் கதவுகளையும் கோமய ஜலத்தினால் அலம்பிவிட்டு ஸம்ப்ரோக்ஷணத்தை செய்யவேண்டியது.]

"த்வஜஸ்தம்பே ச ஸம்ஸ்ப்ருஷ்டே சண்டாலாத்யைர்விஶேஷத: ।
ஸ்தம்பாந்தரம் ஸம்ஸ்தாப்ய ஶாந்திஹோமம் ஸமாசரேத் ॥"

(ஸௌபர்ண ப்ரஶ்ந ஸம்ஹிதை)

[சண்டாளர்கள் முதலியவர்களினால் த்வஜ ஸ்தம்பம் தொடப்பட்டிருந்தால், அந்த ஸ்தம்பத்தை எடுத்து விட்டு, வேறு ஸ்தம்பத்தை நட்டு சாந்தி ஹோமத்தைப் பண்ணவேண்டும்.]

இம்மாதிரியான வசநங்கள் பாஞ்ச ராத்ர க்ரந்தங்களில் ஆயிரக் கணக்காகக் காணப்படுகின்றன. சைவாகமமான காமிகாகம க்ரந்தத் திலும்,

“ரஜக꞉ ஶ்வபசஶ்சைவ சர்மகோ மோசிகஸ்ததைவ ச ।
த்வஜஸ்தம்பாத் பஹி꞉ ஸ்தித்வா ஶிவஸந்தர்ஶனம் சரேத் ॥
சண்டாலகாதீநாம் ப்ரவேஶாயோக்யம் நஹி ।
மோஹேந ப்ரவிஶேயுஶ்சேத் ராஜா ராஷ்ட்ரம் விநஶ்யதி ॥”

[வண்ணான் சக்கிலியன் முதலியவர்கள் த்வஜ ஸ்தம்பத்திற்கு வெளியே யிருந்து சிவனுடைய தர்சநத்தைப் பண்ணவேண்டியது. சண்டாளன் முதலிய தாழ்ந்த ஜாதிகள் த்வஜ ஸ்தம்பத்திற்குள் போகக் கூடாது. அவர்கள் அஜ்ஞாநத்தினல் உள்ளே ப்ரவேசித்து விட்டால் ராஜாவுக்கும் ராஜ்யத்திற்கும் நாசம் நேரிடும்.] என்று சொல்லியிருப்ப தால், சிவன் கோவில்களிலும் ஸங்கர ஜாதிகள் ப்ரவேசிக்கக் கூடாது. அப்படி விபரீதமாக ப்ரவேசித்தால்,

“தத்க்ஷணாச்ச்ரீதேவதாஸ்தானதேஶம் வ்ரஜந்தி தே” என்று சொல்லியிருக்கிறபடி அவர்கள் ப்ரவேசித்த இடங்களில் தேவதைக ளிருக்கமாட்டார்கள். ஆகையினல், சூத்ரகமலாகரம் பதிஞேராவது பத்ரிகையில் சண்டாளாதிகளைக் குறித்து,

“சதுர்ணாமபி ஸர்வேஷாம் நராணாம் ப்ரதிவர்ணவா꞉ ।
பஹிர்ஜா தேவாலயம் த்ருஷ்ட்வா ப்ரணாமைஸ்ஸத்க்ருதிம் க்ருத꞉ ॥”

என்று சொல்லியுள்ளபடி தேவாலயத்தை நமஸ்கரிப்பதுதான் சாஸ்த்ர ஸம்மதமாகும். ஆகையினல்தான் நம்பாடுவான் சரித்ரத்தில்

“பஹிராஜ்ஞாபனே பாதி ஸ்ம ஸம்ஸ்ருஷ்டா வ்யவஸ்தித꞉ ।”

என்று வராஹ புராணத்தில், நம்பாடுவான் தேவாலயத்திற்குத் தூர தேசத்திலிருந்தே பாடினதாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினல் இந்த ப்ரமாணங்களுக்கு விருத்தமாக நடக்குமவர்கள் வைதிக மதஸ்தர் கள் ஆகமாட்டார்கள்.

ஆண்டாள் வைபவம்

(ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர், பி.ஏ., பி.எல்., திருப்பாப்புலியூர்)

[ஸஞ்சிகை 7 : பக்கம்-239 தொடர்ச்சி]

பிறகு ஆண்டாள் பெரியாழ்வார் க்ருஹத்தில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருகையில், பதிஸம்யோக ஸுலபமான வயஸ் நெருங்கிய வளவில் பகவத் பக்தி ஶ்ருங்கார ரூபமாகப் பரிணமித்து, அது காரணமாக அவள் பெருமானுக்கென்று ஆழ்வார் தொடுத்து வைக்கும் திருமாலைகளை அவருக்குத் தெரியாமல் தன் சிரஸ்ஸில் தரித்துக்கொண்டு, பிறகு அவிழ்த்து முன் போலவே குடலையுள் வைத்து வந்தாள். இச்செய்கை ஒரு ஸமயம் யத்ருச்சையாய் ஆழ்வார் கண்ணில் விழவே அவர் திடுக்கிட்டு, 'இப்படிப்பட்ட மஹாபசாரத்தைச் செய்யலாமா?' என்று குமாரத்தியைக் கடிந்து, அம்மாலைகளை அப்புறம் வைத்து, விரைவாக நந்தவனத்துட் புகுந்து, புதிதாகப் புஷ்பங்களைக் கொய்து மாலைகள் கட்டி, அவைகளை க்ருஹத்துக்குக் கொண்டு வராமலே நேராகக் கோயிலுக்கு எடுத்துச் சென்று பெருமானுக்கு ஸமர்ப்பிக்கும்படி அர்ச்சகரிடம் கொடுத்தார். அப்போது வடபெருங் கோயிலுடையான் 'ஸுகந்திகளான மாலைகளைத் தவிர்த்து கந்தமற்ற இவைகள் நமக்குத் தேவையில்லை' என்று அசரீர வாணீ வாயிலாக அறிவித்ததைக் கேட்டு ஆழ்வார் வியப்புடன் திகைத்து நின்று, 'நாம் விபரீத க்ரஹணம் பண்ணினோம்; நம் நினைவு பெருமாள் திருவுள்ளத்துக்கு உகப்பல்ல' என்று நிச்சயித்துத் தம் திருமாளிகைக்குத் திரும்பிப்போய், அதிப்ரீதியுடன் புத்ரியைக் கூவியழைத்து, நடந்த செய்தியைச் சொல்லிப் புதிதாய்க் கட்டின மாலைகளை அவளைக் குழலில் அணிந்து கொடுக்கும்படி செய்து, இவைகளையும் முன் விலக்கிய மாலைகளையும் சேர்த்தெடுத்துக்கொண்டுபோய்ப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து, அவரது விசேஷ கடாக்ஷத்துக்குப் பாத்ரமானார். இவ்வ்ருத்தாந்தம் ப்ராமாணிகமேயென்பதற்கு, அவிச்சிந்நமாய் வந்திருக்கும் ஐதிஹ்யமும், அதையநுஸரித்துத் திவ்ய தேசந்தோறும் நடந்து வரும் ஆசாரக்ரமமும், மஹர்ஷிகள் போல் அவிதத வாக்குள்ள உய்யக்கொண்டார் பட்டர் தேசிகன் முதலிய ஆசார்யர்களின் திவ்ய ஸூக்திகளும் தகுந்த ஆதாரமாகும். ஆனாலும் 'பாகவதோத்தமையாகவும் பதிவ்ரதாக்ரேஸரையாகவும் கொண்டாடப்பெற்ற ஆண்டாள் இவ்விதம் தனது புக்த சேஷங்களான மாலைகளைப் பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கும்படி செய்தது '[illegible]' என்கிறபடி அமைந்துள்ள நம் சுத்தாந்த ஸித்தாந்தாசாரத்துக்கு விருத்தமன்றோ? லோக

திலும் சாஸ்த்ரத்திலும் ஏற்பட்டிருக்கும் பதிவ்ரதா தர்ம ப்ரக்ரியைக்கு இது மாறன்றோ? இதைக்கண்டு 'யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்தேவேதரோ ஜந:' என்றபடி உலகமெங்கும் அநுஷ்டாநம் அதரோத்தரமாக இடமுண்டாகாதோ?' என்கிற சங்கைகள் ஏற்படக் கூடுமாகையால், இதைச் சற்றுப் பராமர்சிப்பது அவசியமாகும். ஆண்டாள் அவதரித்தது முதல் பகவதேக பராயணையாய், அவனல்லது வேறொன்றிலும் மனத்தைச் செலுத்தாது, அவனையே பதியாக அடையவேண்டுமென்கிற பேரவாக் கொண்டு, அதற்காக இளமைப் பருவத்தில் மார்கழி நீராட்ட வ்ரதத்தை யதாக்ரமம் அநுஷ்டித்துப் பிறகு தை மாதம் முதலாக அவ்வக்காலத்துக்கு அநுகுணமான அநுஷ்டாநங்களைக் கைக்கொண்டு, வெகு ஶ்ரத்தையுடனும் அத்யந்த ப்ரேமையுடனும் பகவானை த்யானித்தும் ப்ரார்த்தித்தும் வருகையில், தனக்கு யௌவந தசை புஷ்கலமாக அமைந்த பிறகும் மநோரத பூர்த்தி ஏற்படாமல் விலம்பித்தது கண்டு, 'காமம் ப்ரியா நஸமக்ஷம் மநஸ்ஸ்தம் த்ரபாவசம் நாஸ்யாதி। சக்ரதாமேவ மநஸிஜே ரதிஸம்ப்ரயோகநாகல்ப்யதே ॥' என்கிறபடி காமிஜந மநோவ்ருத்தியின் ப்ரகாரத்தை யொட்டித் தன் விஷயத்தில் பகவானுக்குள்ள மநோபாவத்தை யறியக் கருதி, அதற்குத் தகுந்த உபாயத்தைப் பற்றி யோசித்தவளவில், ப்ரம்ஹைக நிஷ்டரான தன் திருத்தகப்பனர் தனக்கு ஏற்பட்டுள்ள மநோபாவத்தைச் சிறிதும் அறியக்கூடியவர் அல்லராகையாலும், லஜ்ஜையால் அவருக்கு இதைத் தெரிவிக்கத் தனக்கு ஸாத்யப்படாததாலும், வேறொரு அந்தரங்கரும் தனக்கு இல்லாமையாலும்,

'காமார்த்தா ஹி ப்ரக்ருதி க்ருபணாஶ்சேதநாசேதநேஷு' என்று மஹா கவியும், அதை யநுஸரித்து 'விஶ்லேஷேண க்ஷபிதமநஸாம் சேதநாசேதநேஷு யாஞ்சா தைந்யம் பவதி' என்று கவிதார்க்கிக ஸிம்ஹமும் கூறியவாறு, பகவானுக்கென்று உத்தேசிக்கப்பட்டு அவரிடம் அவஶ்யம் போய்ச் சேரவேண்டிய திருமாலையாழ்வார் மூலமாய்த் தனது மதநஸந்தேசத்தை அனுப்பி வைப்பது ஸமீசீநமான உபாயமென்று ஆண்டாள் கருதினர் போலும். ஸ்ரீவைஜயந்தியின் ப்ரதிக்ருதி போன்றதான பெரியாழ்வார் திருக்கையால் அமைக்கப்பெற்ற திருமாலைக்குத் தேவதாதிஷ்டாநம் இருக்குமாகையால், அதைச் சேதந கோடியில் சேர்த்தே ஆண்டாள் அதன் மூலமாகத் தன் மணாளனுக்கு ருக்மிணீதேவி ஒரு வ்ருத்த ப்ராஹ்மணன் மூலமாய்க் கடிதம் அனுப்பியது போல் தன் மநோரதத்தை அறிவித்தது யுக்தமேயாகும்.

மேலும் ஆண்டாள் தம் சரீரத்தை அலங்கரித்துக்கொள்ள வேண்டுமென்கிற சாபலத்தால் பெருமாள் மாலையைச் சூடிக்கொண்டதாகக் கொள்வது சிறிதும் உசிதமாகாது. பெருமாளுக்கென்று உத்தேசிக்கப்பட்டதை 'உபரி ஹி தேவேப்யோ தாரயதி' என்கிற ஶ்ருதிக்கு உபப்ரஹ்மணமாய் 'ப்ரஹ்மா ஶிரஸா வாதீரம் ஹவிஷோ

வியிவசூடா’ என்று வால்மீகி பகவான் ஸ்ரீராகவனுடைய அநுஷ்டாந க்ரமத்தை வர்ணித்தபடி ஆண்டாள் தானே தன் சிரஸ்ஸில் ஏந்திப் பெருமாள் ஸந்நிதிக்குக் கொண்டுபோய், அவர் திருமேனியில் சாத்த வேண்டுமென்கிற அபிஸந்தியைத் தீவ்ரமாக மேற்கொண்டிருந்த போதிலும், தான் ஸ்த்ரீயானபடியால் அப்படிச் செய்வது ஸாத்யமில்லாதது பற்றி, அவ்விதம் மநஸ்ஸில் மட்டும் ஸங்கல்பித்துத் திருமாலையைச் சிரஸா வஹித்துத் தந்த்ரேண பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார் போலும். இதைக் கணிச்சித்தே ஆசார்யன், ‘ஸ்வகவிநிஹிதாஸ்ரக்க்ருணாக்ருஷ்டநாயா’ என்று அநுஸந்தித்தார். இப்படியாகில் ‘ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம்’ என்று பட்டர் அருளிச்செய்தது எங்ஙனேயென்னில், பெருமாளுடைய அபிப்ராயப்படி அது தம்முடைய காந்தையின் காத்ர ஸம்ஸ்பர்ஶத்தால் ஏற்றம் பெற்றதென்கிற ரஸாநுபவத்தை வெளியிடுவதற்காக வென்று கொள்வதே ஸமீசீநமாகும். இதற்கு,

‘வாஹி வாத யத꞉ காந்தா தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருஶ ।
த்வயி மே காத்ரஸம்ஸ்பர்ஶ꞉ சந்த்ரே த்ருஷ்டிஸமாகம꞉ ॥’

என்கிற ஸ்ரீராகவனுடைய பாசுரம் ப்ரமாணம். மேலும் மதீயம் என்று ஸங்கல்பித்து வைத்த பிறகு பகவச் சேஷ பூதமான மாலையைத் தத்புக்த ப்ராயமாகப் பாவித்து

‘க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா பர்த்து꞉ கரவிபூஷணம் ।
பர்த்தாரமிவ ஸம்ப்ராப்தா ஜாநகீ முதிதாऽபவத் ॥
ததஸ்ஸா ஹ்ரீமதீ பாலா பர்த்ருஸந்தேஶஹர்ஷிதா ।
பரிதுஷ்டா ப்ரியம் ஶ்ருத்வா ப்ராஶம்ஸத மஹாகபிம் ॥’’

என்றபடி அதை ஸாக்ஷாத் பகவானென்றே நினைத்துத் தன் உத்தமாங்கத்தில் தரித்துக் களித்தாள் போலும். அப்படியில்,

‘க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா பர்த்துர்மால்யவிபூஷணம் ।
பர்த்தாரமிவ ஸம்ப்ராப்தா கோதா ப்ரமுதிதாபவத் ॥
ததஸ்ஸா ஹ்ரீமதீ பாலா பர்த்ருஸம்ஶ்லேஷமானஸா ।
ஶிரஸா தாரயாமாஸ மாலாம் தாம் பர்த்ருமாநிநீம் ॥’

என்று பரிணமிப்பது உபபந்நமாகும்.

தவிரவும்: ஆண்டாள் பூதேவியின் அவதாரமாகையால், ‘கந்தவதீ ப்ருதிவீ’ என்கிற சாஸ்த்ரப்படி கந்தத்தைத் தனக்கே அஸாதாரண குணமாகப் பெற்றவளாகையால், தன் திருமேனியில் ஸர்வ ஸௌகந்த நிதியான திருக்குழலின் ஸம்பந்தத்தால் திருமாலைக்கு ஓர் அபூர்வமான ஸௌரபம் உண்டாகுமென்று நினைத்துப் புஷ்பத்தின்மேல் பன்னீர்

OF THE REGISTRAR OF BOOKS
11 SEP 1942

தெளிப்பதுபோல் அதற்கொரு ஸம்ஸ்கார விசேஷத்தால் அதிசயா தாநம் செய்யக் கருதி, இம்மாதிரி தம் திருமுடியில் சூடிக்கொடுத்தாள் என்றும் கொள்ள ப்ராப்தம். அவ்வகையில் இதுவே உபசார கோடியில் ஸாக்ஷாத்தாகச் சேருமாகையால் அபசார சங்கைக்கே இடமில்லை. இதைக் கொண்டே ஆசார்யன், '[illegible]' என்று அநுஸந்தித்தார் போலும். இம்மாதிரியான அஸாதாரண ஹேதுக்களைக் கொண்டு ஆண்டாளின் அநுஷ்டாநத்தின் உபபத்தி ஸாதிக்கத்தகுமாகையால், அது ஸ்ரீக்ருஷ்ண லீலைபோல் அவ்வதிகாரிக்கு மட்டில் ஏற்குமே தவிர, ஸாமாந்யமாய் லோகத்தில் எல்லோருக்கும் த்ருஷ்டாந்த மாகாதென்பதே இந்த சோத்யத்துக்குப் போதுமான ஸமாதாநமாகும்.

இப்படி, திருமாலை சூடிக்கொடுத்த வ்ருத்தாந்தத்தால் தனக்குப் பெருமாளிட மிருப்பதுபோல் பெருமாளுக்கும் தன்னிடமுள்ள ஹாவ பந்தம் செவ்வனே தெரியவந்த பிறகு, ஆண்டாளுக்கு [illegible] மாக மேன்மேலும் வளர்ந்து, அதன் பரீவாஹமாகத் தன் அநுபவ விசேஷத்தின் ஆநுபூர்வியை லோகாநுக்ரஹார்த்தம் அம்ருததாரைபோல் ஸ்வாதுதமமான திருப்பாசுரங்கள் வாயிலாக வெளியிட்டு, '[illegible]' என்னும் திருநாமத்தை அந்வர்த்தமாக்கிப் பெரிய பெருமாளை மணம்புரிவதாகிய தன் மநோரதம் பூர்ணமானாலொழிய தரிக்கவொண்ணாது என்கிற உறுதி கொண்டிருக்கையில், அழகிய மணவாளனும் தன் ப்ரியதமையின் மநோரதத்தைத் தலைக்கட்டி வைக்கவேண்டுமென்று ஸங்கல்பித்து, அந்த ஸங்கல்பத்தையும் அதை ஸாதிக்கும் உபாயத்தையும் பெரியாழ்வாருக்கு ஸ்வப்நத்தில் அறிவித்த தன்பேரில், ஆழ்வாரும் தமது செல்வப் புதல்வியை மணக்கோலத்துடன் கோயிலுக்கு எழுந்தருளப்பண்ணிப்போய் அழகிய மணவாளன் ஸந்நிதாநத்தில் சேர்க்க, ஆண்டாளும் பெரிய பெருமாளை அணுகித் தேஜோரூபியாய் அவர் திருமேனியில் லயித்துவிடவே, ஆழ்வார் விஸ்மய பரவசராய் வெகுநேரம் நின்று, பிறகு தம் திருமகளையும் மணப்பிள்ளையையும் சேர்த்தியில் ஸேவித்து ஆநந்திக்கவேண்டுமென்று கண்ணீர் உதிர்த்துப் ப்ரார்த்திக்க, பெரிய பெருமாள் மிகக் கருணையுடன் அவ்விதமே யாகட்டுமென்று அநுக்ரஹித்து ஆண்டாளுடன் ஏகாஸநத்தில் அர்ச்சாரூபியாக ஸேவை ஸாதிக்க, ஆழ்வாரும் ஸேவித்துப் பரமாநந்தத்தில் மூழ்கினர். இது முதலாகவே பகவத் ஸந்நிதிகள் தோறும் ஆண்டாளுடைய அர்ச்சாவிக்ரஹம் திருப்ரதிஷ்டை செய்து ஆராதிக்கப்பட்டுவருகிறது. பெரிய பிராட்டியின் ஜகந்மாத்ருத்வாகாரத்தின் அபிவ்யக்தி விசேஷமாகிய பூமிப்பிராட்டியின் அவதாரமாகிய ஆண்டாளின் இத் திவ்ய சரித்ரம் அக்காலத்தில் ஜனங்களுக்கு ப்ரத்யக்ஷ ஸித்தமாயிருந்து, அது தொடங்கி அவிச்சிந்நமான ஐதிஹ்ய முகமாய் இன்று வரையில் லோகத்தில் ப்ரஸித்தமாயிருப்பதாலும், அதற் கநுகுணமாகப் பகவதாலயங்களில் ஆசாரக்ரமமும் நடைபெற்று

வருவதாலும், இதன் யாதார்த்யத்தைக் குறித்து ப்ரமாணாந்தரம் வேண்டுவதில்லை

இவ்வாறு ஆண்டாள் விபவாவதாரம் செய்து, அவ்வவதாரத்திலிருந்தே அர்ச்சாரூபியான பெரிய பெருமாளை ஸ்வயம்வரபதியாக வரித்து, தன் நிஸ்ஸீம பக்தியினால் அவரைத் தன் வசமாக்கிய வ்ருத்தாந்தத்தைக் கணிசித்தால், "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:", என்கிற ஶ்ருதிக்கு உபப்ருஂஹணமான 'ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோ(அ)த்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:' என்கிற கீதாவாக்யத்தை அநுஸரித்து, 'ப்ரியதம ஏவ ஹி வரணீயோ பவதி; யஸ்ய சாயம் நிரதிஶயப்ரிய: ஸ ஏவாஸ்ய ப்ரியதம:' என்கிற நம் பூர்வாசார்யர்களின் வ்யாக்யாநத்தின் யாதார்த்யம் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தால் நிஸ்ஸம்ஶயமாக்கப்பட்டதுபோல் தோன்றுகிறது. இதை வைத்தே ஸ்ரீ பராசரபட்டர்,

'நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தமத்யாபயந்தீ |
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய: ||"

என்று அநுஸந்தித்தார்போலும். பெருமாளுக்கு ஸர்வப்ரகாரத்திலும் ஸஹதர்மசாரிணீயாயிருக்கும் பெரிய பிராட்டியாருக்கு ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி லய விமோக்ஷணாதி வ்யாபாரங்களில் பெருமாளுக்கு ஸஹகாரியாய் அந்வயிப்பது, ஆஶ்ரிதர்களுக்கு அபீஷ்டதாநம் பண்ணும் விஷயத்தில் புருஷகாரமாய் நிற்பது, பெருமாளுடைய போகத்துக்கு ஆலம்பநமாயிருப்பது, ஆகிய மூன்று ஆகாரங்கள் ப்ரதாநமாய் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளில் இரண்டாவதாகிய ஆஶ்ரிதப்ரயோஜந புருஷகாரத்வாகாரத்தின் அபிவ்யக்தி விசேஷமாகப்பூதேவியும், மூன்றுவதாகிய போகோபகரணத்வாகாரத்தின் அபிவ்யக்தி விசேஷமாக நீளாதேவியும் வகுத்து நிற்கிறார்கள். ஆகையால் போகைகஸ்வபாவையான நீளாதேவியின் அவதார விசேஷமாகிய நப்பின்னைப் பிராட்டியின் போக மயக்குகளில் பெருமாள் ஈடுபட்டுறங்கும்போது ஜகந்மாதாவான பூதேவியின் அவதார விசேஷமாகிய கோதைப்பிராட்டி அவரைத் துயிலெழுப்பி, தான் சூடிக்கொடுத்த மாலைகளின் கந்த விசேஷத்தைக் கொண்டு அவரைத் தன் வசமாக்கி ப்ரஜாரக்ஷண வ்யாபாரத்தைக் கைக்கொள்ளச் செய்து, தான் புருஷகாரமாய் நின்று ஜகத்தை உஜ்ஜீவிக்கச் செய்கிறாள் என்கிற தத்வார்த்தம் இதனால் வெளியாகிறது. இது 'குத்துவிளக்கெரிய' என்றாரம்பிக்கும் திருப்பாவை 19-வது பாசுரத்தை அநுஸரித்து ஏற்பட்டதாகும்.

தவிரவும்: பகவதேகாந்த பக்தியை ஶ்ருங்கார ரூபமாய்ப் பரிணமிக்கச்செய்து, அதற்கு அவனது திவ்ய மங்கள விக்ரஹத்தை ஆலம்பந

மாக்கி அவனைத் தழுவி அநுபவிக்கவேண்டும் என்கிற உத்கடேச்சையை வளர்த்து, அதன்மூலமாய் அவனை வசப்படுத்தும் விலக்ஷணமான பக்தி ஆண்டாளுக்கு ஸ்வரஸமாய் அமைந்ததுபோல் மற்றொருவருக்கும் அமையவில்லை யென்பது நிஸ்ஸம்சயம். இதைக் கணிசித்தே ஆசார்யன்,

> 'போக்யம் தவ ப்ரியதமம் பவதீவ கோதே
> பக்திம் நிஜாம் ப்ரணயபாவனயா க்ருணந்த: |
> உச்சாவசைர் விரஹஸங்கமஜைருதந்தை:
> ஶ்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ்த்வதீயா: ||''

என்று அநுஸந்தித்தார் போலும். 'ப்ரணயபாவனயா க்ருணந்த:' என்றும் உச்சாவசை:' என்றும் சொன்னதாலும், 'தவ ப்ரியதமம் பவதீவ' என்றதாலும், தங்களுக்கு ஸ்வதஸ்ஸித்தமாய் அதிகாரம் அமையாத துறையில் கேவலம் ஆசையினால் இறங்கி வழி பிடிபடாமல் மயங்கும்படிக் காயிற்றென்று ஸூசித்ததுபோல் தோன்றுகிறது. 'குரவஸ்த்வதீயா:' என்றதால், இங்கு முக்யமாய்ப் பெரியாழ்வார் உத்தேசிக்கப்பட்டா ரென்று தோன்றுகிறது. இதர ஆழ்வார்களையும் உத்தேசித்திருக்கலா மென்பதும் அநுசிதமாகாது. நம்மாழ்வாருடைய அநுபவத்தை ஆசார்யன் ப்ரஸ்தாவிக்கும்போது,

> 'வாம்வாஶீமாத்ருஶோபாஹ்ருதஹ்ருஷயவயஶுவமகுவாம்பாவநீத்யா
> வத்யஶ வஹ்நாவஸஹாயெ ப்ரணயிநிஹஜத: ப்ரேயஸீ வாரதந்த்ர்யம் |
> பக்தி: ஶ்ருங்காரவ்ருத்த்யா பரிணமதி முநேர் பாவபந்தப்ரதிம்நா
> யொமாத்ஶுவொகுஸுநாவஸ்திதிஸிஹவிரஹொஹாஷெஶிகாஸ்தத்த்ஷிதா: ||

என்று கூறியதால் நம்மாழ்வார் தம்முடைய பாவநா ப்ரகர்ஷத்தால் தமக்கு ஸ்வாபாவிகமாய் அமையாத ஸ்திரீத்வத்தை ஏறிட்டுக்கொண்டு அதற்கு அநுகுணமான விரஹாதி தசைகளையும் ததுசித ஸாமக்ரீ விசேஷங்களையும் கல்பித்துக்கொள்ள நேர்ந்தது என்று ஏற்படுவதால், ஆண்டாளுடைய அநுபவத்துக்குள்ள நைஸர்க்கிகமான ஏற்றம் தானாகவே ஸித்திக்கிறது. ஆழ்வார்கள் மஹர்ஷிகளைப்போல் த்ரிகால ஜ்ஞாநிகளானதால், ஆண்டாளுடைய அநுபவ விசேஷத்தை முன்னுள்ளார் உட்பட எல்லா ஆழ்வார்களும் ஸாக்ஷாத்கரித்து அதன் ப்ரபாவத்தைக் கண்டு அது 'யமேவைஷ வ்ருணுதே' என்கிற ஶ்ருதி வாக்யத்துக்கு சதுரஶ்ரமாய் ஒத்திருப்பதையும் அறிந்து, ப்ரயத்ந புரஸ்ஸரமாய் அத்துறையில் இழிந்தார்கள்போலும்.

இப்போது பக்தி ஶ்ருங்கார ரூபமாகப் பரிணமித்தது என்று ஆசார்யன் கூறியதன் தத்வத்தைச் சிறிது விசாரிக்கவேண்டியது அவசியமாகும். அலங்கார சாஸ்திரகாரர்களில் சிலர் எட்டு ரஸங்கள் தான் உள

வென்றும், வேறு சிலர் சாந்தி ரஸத்தையும் சேர்த்து ஒன்பது ரஸங்கள் உண்டென்றும் சொல்லுகிறார்கள். நம்மாசார்யன் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் பின் சொன்ன பக்ஷத்தையே பரிக்ரஹித்து சாந்தி ரஸத்தை ஸர்வோத்தமமாகக் கொண்டாடி, தம் நாடகத்தில் அதையே ப்ரதாநமாக அமைத்திருக்கிறார். இப்படியிருக்க, பக்த்ரஸம் என்று பத்தாவது ரஸம் ஒன்றை எப்படி சாஸ்த்ரஜ்ஞர்கள் ஒப்புக்கொள்ள முடியும்? ஸாதாரணமாய் லோகத்தில் பக்தியை ஒரு ரஸமாக வ்யவஹரித்த போதிலும் அதற்கு சாஸ்த்ராதாரம் என்ன? பக்தி ரஸம் ஶ்ருங்கார ரஸமாய் எப்படிப் பரிணமிக்கக்கூடும்? இரண்டும் பரஸ்பர விருத்தங்களாகத்தானே ஸாதாரணமாய்ப் புலப்படுகின்றன?' என்றிப்புடையில் பல சங்கைகள் உதிக்கக்கூடும்.

நவரஸங்கள் ப்ருதக் விதங்களாக ஏற்பட்டிருந்தபோதிலும், அவைகளின் ஒன்றுக்கொன்று சேர்க்கையால் சில மிஶ்ர ரஸங்கள் உண்டாகின்றன. அவ்விதம் சாந்தி ஶ்ருங்காரம் இவ்விரு ரஸங்களின் சேர்க்கையால் பக்தி ரஸம் ஆவிர்ப்பவிக்கிறது. சாந்திக்கு ஸ்தாயீபாவம் வைராக்யமென்றும், ஶ்ருங்காரத்துக்கு ஸ்தாயீபாவம் ரதி யென்றும் ஆலங்காரிக ஸித்தாந்தம். இத்தால் பக்தியின் ப்ராதுர்ப்பாவத்துக்கு விஷயாந்தர விரக்தியும் பஜநீய விஷய ரதியும் அவஶ்யாபேக்ஷிதம் என்று ஏற்படுகிறது. இதையே '[illegible]' '[illegible]' இத்யாதி க்ரமங்களில் அத்யாத்ம சாஸ்த்ரம் கூறுகிறது. இப்படி, சாந்தி ஶ்ருங்காரம் ஆகிய உபயாங்க விஶிஷ்டமான பக்தியில் புருஷோத்தமனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்யாதிசயத்தினால் கவரப்பட்ட ஆண்டாளுக்கு ஸ்வரஸமாய் ஶ்ருங்காராம்சம் ஆதிக்யத்தையடைந்து, அதுவே மேன்மேலும் வளர்ந்த காரணத்தால் அவள் அழகிய மணவாளனையே பதியாகக் கொள்ள வேண்டுமென்கிற அப்ரகம்ப்யமான அபிஸந்தியுடன் தீவ்ர தபஸ்ஸிருந்து ஸர்வ ப்ரத்யக்ஷமாகத் தன் மநோரதத்தை ஸாதித்துக்கொண்டாள். மற்ற ஆழ்வார்களுக்கோவென்றால், இவ்வித ஶ்ருங்கார பாவனை ஸங்கல்ப மாத்ர நிஷ்டமா யிருக்கவேண்டிய தாயிற்றென்பதுதான் இவ்விருவகையான அநுபவங்களுக்கும் வாசியைக் காட்டுகிறது. இதைத்தான் ஆசார்யன் முன் உதாஹரித்த ஶ்லோகங்களில் வெளியிட்டிருக்கிறார்.

தவிரவும்: அர்ச்சாவதாரத்தில் பகவான் கேவலம் கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியாய் நின்று அர்ச்சக பராதீநராய்த் தமது ஸௌலப்ய மஹிமையையே ப்ரகாசிப்பித்தபோதிலும், சில ஸந்தர்ப்ப விசேஷங்களில் விபவாவதாரத்தில்போல் வரப்ரதாநம், உபதேசம், நிக்ரஹ முதலிய நியமந வ்யாபாரங்களைக் கைக்கொள்வதால் அவ்விருவித அவதாரங்களுக்கும் அந்தரங்கமாயுள்ள ஸாம்யம் முநிவாஹந வ்ருத்தாந்தாதிகளால் ப்ரகடமாவதை ஆண்டாள் தமது அநுபவத்தால் எல்லோர்க்கும்

ப்ரத்யக்ஷமாக்கி, ஆஸ்திக லோகத்துக்கு நிரதிஶயமான உபகாரம் செய்திருக்கிறாள் என்பது மிகவும் உகக்கத்தக்கது.

இப்படிப் பல துறைகளில் ஜகத்ரக்ஷணம் செய்வதையே வ்ரதமாகப் பூண்டு, அதற்காகவே இவ்வவதாரம் செய்து, பகவானையும் அதற்கு அநுகுணமாக வர்த்திக்கும்படி தன் வசமாக்கி ஆண்டதடியாக ‘ஆண்டாள்’ என்று அநவர்த்தமான திருநாமம் வஹித்த பூமிப்பிராட்டியின் வைபவத்தை வர்ணிக்கும் விஷயத்தில்,

‘நிஶ்ஶேஷமம்ப³ரதலம் யதி³ பத்ரிகா ஸ்யாத்
ஸப்தார்ணவீ யதி³ ஸமேத்ய மஷீ ப⁴வித்ரீ |
வக்தா ஸஹஸ்ரவத³ந: புருஷஸ்ஸ்வயம் ச
ஶக்யேத நைவ ஸகலோ மஹிமா ப⁴வத்யா: ||’

என்று அநுஸந்திப்பதே யுக்ததமமாகுமாகையால், அடியேன்போன்ற மிதமதிகளுக்கு ப்ரவ்ருத்யவகாஶமே இல்லையாகிலும்,

‘கிஞ்சைஷ ஶக்த்யதிஶயேந ந தே(அ)நுகம்ப்ய:
ஸ்தோதா(அ)பி து ஸ்துதிக்ருதேந பரிஶ்ரமேண |
தத்ர ஶ்ரமஸ்து ஸுலபோ⁴ மம மந்த³பு³த்³தே⁴:
இத்யுத்³யமோ(அ)யமுசிதோ மம வாஜ்ஞநேது ||’

என்ற கணக்கிலே இதற்கு விஷயபூதையான ஸ்ரீகோதை அடியேனுடைய அசக்தியைக்கண்டு கருணை கூர்ந்து, த்ருவன் விஷயத்தில் பகவான் செய்ததுபோல் அடியேன் வாக்கைத் திருத்தித் தமக்கு அர்ஹமாக்கித் தம் திருநாமத்தை ஸார்த்தமாக்கக்கடவள் என்று ப்ரார்த்திக்கிறேன்.

ப்ரீணாது ஜநமஸ்தோத்ரம் விஷ்ணுசித்தாத்மஜாக்ருதி: |
யயா ஹி பரயா ப⁴க்த்யா க்ருதஸ்ஸாக்ஷாச்ச்²ரிய:பதி: ||

2/10/05

ஸ்ரீ:

வைஷ்ணவி விஜயம்

[ஸ்ரீமதீ ராஜலக்ஷ்மி அம்மாள், பெங்களூர்]

ஸௌமித்ரா ஸௌந்தரி என்பதில் ஸந்தேஹமேயில்லை. பூர்ணசந்திரனை நிகர்க்கும் முக காந்தியும், செந்தாழம்பூவை வெல்லும் மேனி மினிமினிப்பும், வெருண்ட மான் விழிகளும், அடர்ந்து சுருண்ட கருங் கூந்தலுமுடைய கட்டழகியை, பணிவும் அடக்கமும் ஒழுக்கமும் பகவத் பக்தியும் ஒருங்கே சேர்ந்து அலங்கரித்தன. அவள் நற்குணங்களுக்கு வசமாகாதவர்களே இல்லை. இலக்குமணனைப் பெற்றெடுத்த பாக்யவதியின் பெயரையே அவளுக்குப் பெற்றோர்கள் சூட்டினார்கள். அந் நாமம் பயன் பெறுமாறு அனைவரிடமும் அவள் அன்பு மழையைப் பொழிந்தாள்; விவேகமாகிய விளக்கை ஏற்றினாள். "கந்நிகா ரத்நம், கௌஸ்துப ரத்நம்போல் புகுந்த இடம் பிறந்த இடம் ஆகிய இரு குலத்திற்கும் பரந்த கீர்த்தியைத் தருபவளாதலால், புத்ரர்களைக் காட்டிலும் புத்ரிகள் நூறு மடங்கு மேன்மை பொருந்தியவர்கள்" என்னும் பழமொழியை மெய்யாகச் செய்தவள்.

அவளுடைய பெற்றோர்களுடைய மாளிகையின் முன்புறத்தில் அழகிய புஷ்பத் தோட்டம் ஒன்று விளங்கியது. குமாரி தினந்தோறும் அதிகாலையில் எழுந்து, மணம் மிக்க மலர்களைக் கொய்து, எம்பெருமானுக்கு நேர்த்தியான மாலை கட்டுவது வழக்கம். ஒரு நாள் அத் தருணத்தில் வெகு தூரத்தில் மனத்தை உருக்கும் இனிய கானம் கேட்டது. அது மகளின் மனத்தைக் காந்த ஊசிபோல் இழுத்தது. புஷ்பம் பறிப்பதை மறந்து, அவள் கானம் வரும் திசையை நோக்கிச் சித்திரப் பதுமைபோல் நின்றாள்.

ஸௌந்தர ரூபங்களையோ ஆச்சர்யமான காட்சிகளையோ காணும் போதும், இன்னிசைக் கீதங்களையோ பகவத் கதைகளையோ கேட்கும் போதும் நாம் மெய்ம்மறந்து விடுகிறோம். அப்பொழுது நம் உள்ளம் அடையும் ஆநந்தத்திற்கும் உத்ஸாஹத்திற்கும் எல்லையே இல்லை. ஜந்மாந்தர வாஸனைக்கு அநுகுணமாக ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றில் மோஹம் அதிகம்.

கானம் வரவர ஸமீபத்தில் கேட்க ஆரம்பித்தது. பாடிக்கொண்டு வந்தவள் பகவத் பக்தை. பாடிய பாட்டுக்கள் தேன் ஒழுகும் திருவாய் மொழியிலிருக்கும் தெவிட்டாக் கனிகள்; வயிறு வளர்த்துப் பிழைப்பதற்கும், ஆத்மா கடைத்தேறுவதற்கும் பயன்படுகிற திவ்ய ப்ரபந்தம். அம் மங்கை மோஹன ராகத்தில் உருக்கத்துடன்

1. தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை
விரைகுழவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தா லீன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி யதுவேபோன் றிருந்தேனே.

எனும் பாட்டைப் பாடிக்கொண்டு இவர்களின் இல்லத்தின் ஸமீபம் வந்தாள். அம் மங்கையின் முகத்தில்தான் என்ன? கருணை மழை பொழியும் விழிகளின் அழகுதானென்ன? ஸாக்ஷாத் அருந்ததியோ அநஸூயையோ என்று பிறர் வியக்கும் வண்ணம விளங்கினாள்.

எவ்விதம் ஜீவித்தாலென்ன? இன்பமும் சாந்தமும் பணத்திலும் பதவியிலும் இருப்பதாகக் காணோம். செல்வவான்கள் அநுபவிக்கும் மனக் குறைக்கும் கவலைக்கும் எல்லையே இல்லை. கூழ் குடித்துக் கந்தை உடுக்கும் ஏழைகளின் ஆநந்தத்திற்கும் திருப்திக்கும் குறைவேயில்லை.

வைஷ்ணவியின் த்ருஷ்டி ஸௌமித்ரையின்மேல் விழுந்தது. கந்நிகையும் அவள் கருணைக்கண் வலையில் சிக்கினாள். அவர்கள் உள்ளத்தின் மலர்ச்சியை முகம் எடுத்துக் காட்டியது. அவர்கள் விழித்த வேளை அபூர்வ ஸ்நேஹத்தை விளைவித்தது. குமாரி அன்புடன் அரிசியைக் கொண்டுவந்து கொடுத்தாள். அவளை மனமார வாழ்த்திச் சென்றாள் பிக்ஷுகள். இளமையின் இயல்பாகிய சிறுமியின் தெளிந்த உள்ளம் இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தது. பாடகி சென்ற திக்கையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவளுடைய பாட்டிற்கு என்ன அவ்வித மஹிமை? வறட்டு நாட்டுப்புறப் பாட்டு; பக்க வாத்தியங்களோ, பின் பாட்டோ, தாளமோ, ஆலாபநமோ ஒன்றையுங் காணோம். ஆனால் இவ்வாடம்பரங்களுக்கெல்லாம உயர்ந்திருந்து ஹ்ருதயத்திலிருந்து சுவை மிக்க பக்தி பாவம் சுரந்து பாடியதே கந்நிகையைப் பரவசமாக்கி வசீகரித்தது.

"ஸௌமித்ரா! எங்குச் சென்றாய்? குளித்துவிட்டுச் சாப்பிட வேண்டாமா?" என்று அன்னை அழைக்கும் குரல் கேட்டது. உடனே ஸௌமித்ரை நித்ரையினின்று விழித்தவள் போல் உட்சென்றாள்.

மறுதினம் பொழுது புலர்ந்தது. ஆதித்யன் உதித்தான். நித்யம் அதே ஸமயம் பாலகி மல்லிகை மலர் பறித்தலும், வைஷ்ணவியின் வருகையும், செவிக்கினிய கானமும், பெண்மணி அரிசியைப் படியுடன் கவிழ்த்தலுமாக இவ்விதம் சில தினங்கள் சென்றன. ஸௌமித்ரைக்கு அவளிடம் தேவதாவிஸ்வாஸம் பிறந்தது. அவள் வருவதற்குச் சற்று நேரமானால் ஸௌமித்ரை வாசலையே நோக்கி இருப்பாள்; 'ஏன் இன்னும் வரவில்லை?' என்று ஏங்குவாள். அவளுடைய திவ்யப் பாடல்கள் அவள் கனவிலும் நனவிலும் ஸதா ஒலித்தன. ஸௌமித்ரையைப் பார்த்து அவளுடைய தோழி ஸௌமதியும் அப்பாடல்களில் ஈடுபட்டாள். நாளுக்கு நாள் பிக்ஷுகளின் பாட்டுக்கள் ப்ரஸித்தி அடைந்தன. தெருப்

பெண்களெல்லாம் அவ்விடம் வரத் தலைப்பட்டனர். அவர்கள் அனைவரும் கோலாஹலம் பொங்க, 'பகவதி! இன்னொரு பாட்டுப் பாடு' என்று கூவுவார்கள். அவள் அடைந்த ஆநந்தத்திற்கு அளவேயில்லை.

ஒரு நாள் அவள் தன்னைச் சுற்றிக் கூடியிருக்கும் குழந்தைகளைக் கண்டு உத்ஸாஹம் உள்ளடங்காமல் பாடல்களுக்குப் பொருள் கூறவும் ஆரம்பித்துவிட்டாள். "என் செல்வங்களே! கவனமாய்க் கேளுங்கள். நான் பாடும் பாட்டு திவ்ய ப்ரபந்தத்தின் பாசுரம்; ஸகல க்ஷேமங்களுக்கும் இருப்பிடம்; சிறப்பு வாய்ந்த சிந்தாமணி; நற்கனியருளும் கற்பகத் தரு; வேதங்களின் இனிப்புள்ள ஸாரம்; குலசேகரப் பெருமான் பாடியது; வித்துவக்கோடெனும் திவ்ய தேசத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருவடித் தாமரைகளில் சரணாகதி செய்தது; எவ்வளவு அழகு பொருந்திய அர்த்தங்கள் பாருங்கள்.

முதற் பாட்டு:—பத்து மாதம் சுமந்து கடும் ப்ரஸவ வேதனையைப் பொருட்படுத்தாது பெற்ற தாய்மார்களுக்கு அன்றோ தெரியும் குழந்தைகளின் அருமை! அவர்கள் எத்தகைய அன்புடனும் ஆதரவுடனும் தம் குழந்தைகள் தூங்கும் தொட்டில்களின் ஸமீபம் படுத்துறங்கி, அவை சற்று அழுமுன் பாலூட்டிப் தாலாட்டிப் பாதுகாக்கிறார்கள். அவை ஜுரம் மாந்தம் கணை முதலிய நோய்களால் துன்புறும்போது தாம் கடும் பத்தியமிருந்து பால் கொடுத்து வளர்க்கிறார்கள். அவை அறியாமையினால் அதிக பக்ஷணம் வேண்டுமென்று பிடிவாதம் செய்தால், அதிகமாய் உண்டு ஜெரித்துக்கொள்ளார்களென்று அஞ்சியே அளவுக்கு மேல் கொடுப்பதில்லை. துஷ்டக் குழந்தைகளுக்கு நற்புத்தி கற்பிக்கும் பொருட்டே அவைகளிடம் கொண்ட ஸ்நேஹத்தால் தண்டிக்கிறார்கள். அன்னைமார்களின் விலையில்லா அன்பை அறிந்த குழந்தைகளும் கோபத்தினால் அடித்தாலும் தள்ளினாலும் அவள் காலையே கட்டிக்கொண்டு அழுமேயல்லது மற்றொருவரிடம் செல்லமாட்டா. ஆயிரம் பசுக்கள் உள்ள கொட்டிலில் ஒரு கன்றை அவிழ்த்து விட்டால், அது தன் தாயிடமே சென்று பால் குடிக்கும். பகுத்தறிவற்ற ப்ராணிகளே இவ்விதமிருக்கும் அளவில், விவேகமுடைய மனிதர்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா? அதேபோல் ஸகல ஜீவராசிகளும் எம்பெருமானுடைய குழந்தைகள். பதினாயிரம தாய்மார்களுடைய அன்பையும் கவனத்தையும் நம்மேல் மழைபோல் பொழிகின்றார் பகவான். அவர் எல்லையில்லா இரக்கங்கொண்டு, நம்மைக் காப்பாற்றும் பொருட்டே நறுமணம் கமழும் மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த அழகிய வித்துவக்கோடென்னும் திவ்ய தேசத்தில் நம் ஸமீபத்தில் நித்ய வாஸம் செய்கிறார். அவர் திவ்ய திருவடித் தாமரைகளைக் கெட்டியாய்ப் பற்றி, "எம்பெருமானே! நீ எனக்குத் தாய்; நீ கொடுத்த துக்கத்தை நீயேயன்றோ போக்கவேண்டும்? உன் பாத கமலத்தின் நிழலைத் தவிர எனக்கு வேறு புகலிடம் கிடையாது. சினங்கொண்டு பெற்ற தாய் தள்ளினாலும்,

அவள் தப்பவையே நினைந்து அவளுடைய காலைக் கட்டிக்கொண்டு அழும் குழந்தையைப் போலவே உன் குழந்தையாகிய நானும் கதறுகிறேன். ஒரு சிறு குருவி கட்டிய கூட்டை அவிழ்க்க எனக்கு ஸாமர்த்யம் கிடையாது. அவ்விதமிருக்க: ஸர்வசக்தனாகிய நீ கட்டி என்னை அடைத்திருக்கும் கூட்டிலிருந்து நான் எவ்விதம் வெளிக்கிளம்புவேன்? நீயேதான் அவிழ்த்துவிட வேண்டும்'' என்று சொல்லிச் சரண் அடையுங்கள்.

2. கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லா லறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட் டம்மாநீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே.

ஒரு கன்னிகை எப்பொழுதும் கணவனை மணந்து வாழவேண்டும். பெற்று வளர்த்த தாய் தந்தையர் தம் புத்ரியைத் தக்க கணவனிடம் அக்னி ஸாக்ஷியாகத் தானம் செய்த பிறகு இரவல் பொருளை உடையவனிடம் ஒப்புவித்தவரைப்போல் மட்டில்லா மகிழ்ச்சி யடைகிறார்கள். நற்குலத்தில் பிறந்த அக்கன்னிகை அதன் பின்பு விவாகம் செய்து கொண்ட கணவன் மனம் கோணாமல், பதிவ்ரதையாய் அவனே கதி என்றெண்ணி வாழ்கிறாள். அவனால் பல ஸுகங்களை அநுபவிக்கிறாள். அவ்விதமின்றி அவளுடைய கணவன், பிறர் வெறுக்கத்தக்க தீய நெறிகளிற் சென்றாலும், அவன் தன் மனைவியென்றே எண்ணாமல் அடித்தாலும் வைதாலும், தன் நாதனைத் தவிர மற்றொருவரைக் கனவிலும் கருதமாட்டாள். கணவனைப் பிரிந்த ஸமயம் அவனிடம் கொண்ட ஆராக் காதலால் ஸீதா தேவியையும் தமயந்தியையும் போல் அவனையே நினைத்து உருகுவாள். ஸுகன்யை நளாயினியைப்போல், பிணி மூப்பு அடைந்த தன் பர்த்தாவுக்கு ஸந்தோஷத்துடன் பணிவிடை செய்கிறாள். அத்தகைய ஆராக் காதலைப் பரம புருஷனிடம் செலுத்தவேண்டும்.

புருஷோத்தமன் ஒருவனே ஸர்வலோக நாயகன். ஸகல ஜீவாத்மாக்களும் அவனுக்குப் ப்ரிய நாயகிகள்; அவனுக்குப் பணிவிடை செய்துகொண்டு இன்பமாய் வாழவேண்டியவர்கள். நாம் செய்த பாவத்தினால் அவன் அருகில் செல்லத் தகுதியற்றவர்களாய் இருக்கிறோம். நம் பாவங்களைப் போக்கி நம்மை மணக்கும் பொருட்டே ஸர்வேஸ்வரன் ஆகாயத்தை அளாவியிருக்கும் கோட்டைகளாற் சூழப்பட்ட அழகிய வித்துவக்கோ டென்னும் சிறந்த தேசத்தில் மணக்கோலத்துடன் வீற்றிருக்கிறான். அந்த லோகநாதனுடைய ஸந்நிதியில் 'புருஷோத்தமா! நீ என்னை எப்பொழுது அடிமையாகக் கொள்ளப் போகிறாய்? நான் உன்னையே மணந்து வாழ்வேன். என் பாவமாகிய பெருந்தடையால் நீ என்னை இப்பொழுது மணந்து ஆளாவிடினும், ஒலிக்

கும் வீரக்கழலை அணிந்த உன் திருவடிகளையே நாதனாகக் கருதித் துதிப்பேன். எனக்கு உன் திருவடித் தாமரைகளின்றி வேறு கதி கிடையாது' என்று அவனிடம் சரணமடையுங்கள்.

3. மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பால்நோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றிலேன்
தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே.

சக்ரவர்த்தி நீதிநெறி தவறாமல் செங்கோல் செலுத்தி ப்ரஜைகளைப் பரிபாலிக்கிறான். அவ்வரசனே ஒரு ஸமயம் தன் கடமையை மறந்து ஜனங்களை ஸரிவர ரக்ஷிக்காமல் இருந்தாலும், குடிகள் 'அரசன் மறுபடியும் தன் அநீதியை உணர்ந்து பாதுகாப்பான்' என்றும், 'ஊழ்வினைப்பயனால் நாம் துன்பத்தை அநுபவிக்கிறோம்' என்றும் கருதிப் பொறுமையுடன் நற்காலத்தை எதிர்நோக்கி யிருப்பரே யன்றி, அரசனில்லாத நாட்டில் ஒரு நாளும் வாழ எண்ணமாட்டார்கள்; அவன் அரசாட்சிக்கு உட்பட்டே நடப்பார்கள். அங்ஙனமே, மீன்கள் துள்ளி விளையாடும் வித்துவக்கோடெனும் புண்ய க்ஷேத்ரத்தில் அரசாட்சி செய்கிறான் ஸர்வலோக சக்ரவர்த்தி. அவ்வள்ளல் முன்னிலையில், "ஸர்வலோக ரக்ஷகனே! உன் பாத பத்ம மல்லது எமக்கு மற்றொரு தஞ்சம் கிடையாது. எம்மைக் கருணை ததும்பும் செந்தாமரைக் கண்களால் கடாக்ஷித்து ரக்ஷிக்கவேண்டும்" என்று வேண்டிக் கொள்ளுங்கள்.

4. வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மாநீ
ஆளா வுனதருளே பார்ப்பன் அடியேனே.

வைத்யன் நம்முடைய நோயை நீக்கும் பொருட்டு, நம்மைக் கத்தியால் அறுத்தும், காயம் ஏற்பட்ட இடத்தில் காய்ச்சிய இரும்பினால் சுட்டும் சிகித்ஸை செய்கிறான். அவ்விதம் அவன் செய்வதெல்லாம் நாம் ஸுகமடைவதற்காகவே. இவ்வெண்ணத்தினால் நோயாளி வைத்யனிடம் அளவற்ற அன்பையும் நம்பிக்கையையும் கொள்கிறான். அதேபோல், ஸர்வலோக வைத்யன் நாம் செய்த கர்மத்திற்கு ஏற்றபடி நமக்குத் துன்பங்களை விளைவித்து நம்மைத் தண்டிப்பது, நம்முடைய நன்மையைக் கருதியே என்று எண்ணவேண்டும். நீவிர், "வித்துக்கோட்டில் வசிக்கும் வைத்தியனே! நீ என்னைப் பல துன்பங்களை அநுபவிக்கும்படி செய்தாலும், நான் உன்னிடம் மஹா விஸ்வாஸமும் பரம பக்தியும் கொண்டு, உன் எல்லையில்லாத க்ருபையையே எதிர்பார்ப்பேன்" என்று அவனை வேண்டிக் கொள்ளுங்கள்.

5. வெங்கட்டிண் களிறடர்த்தாய் வித்துவக்கோட் டம்மானே
எங்குப்போய் உய்கேனுன் இணையடியே யடையலல்லால்
எங்கும்போய்க் கரைகாணு தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே.

நடுக்கடலில் இருக்கும் கப்பலின் கம்பத்தின்மேல் ஒரு பெரிய பறவை வசிக்கிறது. அது தனக்கு இருப்பிடமாக இருந்த அக்கம்பத்தைத் தவிர்த்து வேறு எங்காகிலும் சென்று வசிக்க எண்ணி, அவ்விரிந்த கடலின்மேல் நாற்புறமும் சுற்றி அலைகிறது. எங்கும் தங்குமிடம் காணமல் மறுபடியும் முன்னிருந்த கம்பமே கதி என்று வந்து சேர்கிறது. அதேபோல் நாம் நமக்கு ரக்ஷகனுகிய ஸர்வேஸ்வரனை விட்டு, அந்ய தேவதைகள் ரக்ஷிப்பார்கள் என்று நம்பி அவர்களை ஆராதித்து மோசம் போகிறோம். அவர்களுக்கு நம்மைக் காக்கும் வல்லமையில்லை என்று அறிந்தபிறகு, காகாஸுரன் பெருமாள் திருவடியில் விழுந்தது போல், "எம்மை இந்த ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேற்ற எண்ணி வித்துவக்கோட்டெனும் திவ்ய தேசத்தில் வந்து அவதரித்த கப்பலே! குவலயா பீடமெனும் யானையை ஸம்ஹாரம் செய்த கண்ணனே! எம்முடைய பாவங்களாகிய தடையைப் போக்குவாய். எம்முடைய கணக்கற்ற குற்றங்களை மன்னித்தருளுவாய்" என்று அவனிடம் சரணமடையுங்கள்.

6. சேந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்
வெந்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட் டம்மாஉன்
அந்தமில் சீர்க்கல்லாவுன் னகங்குழைய மாட்டேனே.

சூரியன் தன் உஷ்ணமான கிரணங்களால் தாமரையை வருத்தினுலும், அவனைக் கண்டால் அது மலருமேயன்றி வாடாது. அதற்கு உஷ்ணமே காரணமென்று கருதி, சிவந்த தணலை அதனருகில் கொண்டு போய்க் காட்டினுல், அது மலராமல் வாடிப்போம். அதேபோல் நாம் முன்பு செய்த தீவினையால் பல துன்பங்கள் நேர்ந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல், "வித்துவக்கோடெனும் திருப்பதியில் நித்யவாஸம் செய்யும் ஸூர்ய நாராயணனே! உன் சிறந்த கல்யாண குணங்களையும் உன் அபார க்ருபையும் நினைத்தா லல்லது, எம்முடைய உள்ளம் குளிர்ந்து களிப்படையாது. அவற்றை நினைத்தே எமது துக்கங்களைப் பொறுப்போம். அவற்றைத் தவிர எமக்கு வேறு கதி கிடையாது" என்று முறையிடுங்கள்.

7. எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கு மற்றவைபோல்
மெய்த்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட் டம்மாஎன்
சித்தமிக உன்பாலே வைப்ப னடியேனே.

மழையில்லாவிடில் ஸூர்ய வெப்பத்தினல் வாடிப்போகும் பயிர்கள் மழைக் கால மேகங்களையே எதிர்நோக்கியிருக்கும். அதேபோல், அநுபவித்தே தீர்க்கவேண்டிய எம் துக்கங்களை எம்பெருமான் இப்பொழுது நீக்காமற்போனுலும், "வித்துவக்கோ டென்னும் புண்ய தேசத்தில் நித்யவாஸம் செய்யும் நீலமேக ஸ்யாமளனே! உன் திவ்ய மங்கள விக்ரஹத்திலேயே எம் சித்தத்தைச் செலுத்துவோம். நாம் மனத்தினல் நினைக்கும்பொருட்டே இவ்விடம் வந்து தோன்றினய். உன் பாத பங்கஜமே எமக்குத் தஞ்சம்" என்று அவனைச் சரணமடையுங்கள். இவ்விதம் குலசேகராழ்வார் உபதேசிக்கிறுர். இன்று அதிக நேரம் சென்றுவிட்டது. நாளை வந்து மற்றப் பாட்டுகளைக் கூறுகின்றேன்" என்று கூறி விடைபெற்றுச் சென்றுள் வைஷ்ணவி. (தொடரும்)

ஸ்ரீ:

மதிப்புரை

(1) ஸ்ரீ பக்த வத்ஸல மாஹாத்ம்யம்: புதுக்கோட்டை ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமீ, பரமர்ஷிகளால் ஜகத்தின் ஸ்ரேயஸ்ஸை உத்தேசித்து ப்ரணீதங்களாயுள்ள ஸ்தல புராணங்களுள் ஒன்றுன இந்தப் புராணத்தை நாகர லிபியில், திருமங்கையாழ்வார் அருளிச் செய்திருக்கும் பெரிய திருமொழி ஏழாம் பத்து பத்தாம் திருமொழியுடன் பிரசுரம் செய்திருக்கிறுர். தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாலூருக்கு ஸமீபத்தில் 'திருக்கண்ண மங்கை' என்று ஒரு க்ஷேத்ரம் இருக்கின்றது. இந்த க்ஷேத்ரத்தில் 'விஷ்ணுபதீ கங்கை' என்றெரு மஹா தீர்த்தமும் 'பக்த வத்ஸலன்' என்னும் திருநாமத்துடன் ஒரு அர்சசாரூபியான தைவமும் விளங்குகின்றன. இந்த ஸ்தலத்தின் மஹிமையைக் கூருகின்றது இந்தப் புராணம். இம்மாதிரி புராணங்களைப் படிப்பதால் அநேக தர்மங்கள் புலப்படுமாகையாலும் எம்பெருமானிடத்தில் பக்த்யதிக்யம் ஏற்படுமாகையாலும், இவை போன்ற க்ரந்தங்கள் வெளிவருவதை நாம் மிகவும் கொண்டாடுகிறேம். கும்பகோணத்திலுள்ள ஜநார்தந அச்சுக்கூடத்தில் இது அச்சுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. "புதுக்கோட்டை ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஏ ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர். எம். ஏ." என்னும் விலாஸத்திற்கு எழுதி இதைப் பெற்றுக்கொள்ளலாம். மூல்யம் தெரியவில்லை.

(2) ஸ்தோத்ராவளி: இது புதுக்கோட்டை வாதூல ஸ்ரீநிவாஸசார்ய ஸ்வாமியால் இயற்றப்பட்டுள்ளது. 'ஹரி ஸ்துதி' 'ஹரிபத கமல ஸ்துதி' 'ஸ்ரீ ராஜகோபால ஸ்துதி' 'ஆசார்ய ஸ்துதி', என்று நான்கு ஸ்தோத்ரங்கள் இதில் தென்படுகின்றன. அழகான ஸம்ஸ்க்ருதத்தில் பத்ய ரூபங்களாக எழுதப்பெற்றிருக்கின்றன. மிக அபூர்வமான அர்த்தபுஷ்டியும் பதஸௌஷ்டவமும் இவைகளின் மஹிமைகளுள் முக்யமானவை. நாலு ஸ்தோத்ரங்களும் பெருமை வாய்ந்துள்ளவனுக இருக்கையிலும், 'ஸ்ரீ ராஜகோபால ஸ்துதி' நமக்கு மிகவும் ஆகர்ஷகமாகத் தோன்றி அதைத் திரும்பத் திரும்பப் படித்து நாம் ஆநந்தித்தோம். இக்காலத்தில் இம்மாதிரி ரஸவத்தான ஸம்ஸ்க்ருத ஸ்லோகங்களைக் கவநம் செய்யும் திறமையுள்ளவர்கள் துர்லபர்களாதலா லிவரை நாம் மிக்க ப்ரீதியுடன் கொண்டாடுகிறேம். புதுக்கோட்டை ஐக்யமுத்ராலயத்தில் அச்சுப் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது. மூல்யம் அணு 8.

(3) ஸ்ரீ அழகிய சிங்கரின் புகழ்மாலை 5. ஸ்ரீ அஹோபிலமடம் 40-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரின் 19-வது மஹாராதநத்தன்று காரக்குரிச்சி வங்கிபுரம் ஸ்ரீ. உப. ஸுந்த்ரராஜாசார்ய ஸ்வாமியால் இந்தப் புகழ்மாலை ப்ரசுரம் செய்யப்பட்டது. இதில் ஸ்ரீ அழகிய சிங்கரின் தனியன்களும், 41-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய வைபவமும் அநேக சித்ர படங்களும் காணப்படுகின்றன. இதற்குமுன் வெளிவந்திருக்கும் புகழ்மாலைகள் போல இதுவும் பூர்ணமான பெருமை வாய்ந்துள்ளதாகவே இருக்கின்றது. "காரக்குரிச்சி ஸ்ரீ, கே. டி. ஸுந்தராஜாசார்யர் பி. ஏ., எல். டி., 2/19 கச்சாலேச்வர அக்ரஹாரம், ஜ்யார்ஜ் டவுன், மதராஸ்" என்னும் விலாசத்தில் இது அகப்படும். மூல்யம் தெரியவில்லை,

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

வேதாந்த சிரோமணி நேடுந்தெரு. ரா. பத்மநாபாசாரியர்

இயற்றிய

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விஷயமான

அந்தாதியின் பதவுரை

தனியன்கள்

लक्ष्मीनृसिंहस्सकलेश्वरो यस्याज्ञप्तवान् नाथमुने स्वप्ने ध्वनिना च । श्रीमद्वण्शठकोपयतीन्द्रमाद्यास्तौत् परांकुशयतीन्द्रं तं भजे ॥

தனியனின் பொருள்:—ஸர்வ ஜகந்நியந்தாவான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனால் ஆதி வண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய அந்தாதியைச் செய்தருளும்படியாக, ஸ்வப்நத்தில் எந்த ஸ்வாமியானவர் நியமிக்கப்பட்டு, அந்த நியமநத்தைச் சிரஸா வஹித்துக்கொண்டு அந்த ப்ரபந்தத்தை ஆரம்பிக்கும்போது திவ்ய த்வநி மூலமாக கருத்மானாலேயும் நியமிக்கப்பட்டு, ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் அந்தாதி என்னும் தமிழ் ப்ரபந்தத்தைச் செய்தருளினரோ, அந்த ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹா தேசிகனை (21-ம் பட்டம் ஸ்வாமி) நான் துதிக்கிறேன்.

ஒன்பதுரு நரசிங்க னுகந்துறையும் திருப்பதிகள்
அன்புடனே பணிசெய்யும் அற்புதனு மாசிரியன்
முன்புற்ற சடகோபன் மொய்கழலை யேத்தியெழும்
பண்புடைய பராங்குசன்தன் பாதமலர் பரவினமே.

உரை

பதவுரை] ஒன்பதுரு நரசிங்கன் = (ஜ்வாலா ந்ருஸிம்ஹன் அஹோபில] ந்ருஸிம்மன், லக்ஷ்மீ ந்ருஸிம்மன், கரோட ந்ருஸிம்மன், காரஞ்ச ந்ருஸிம்மன், பார்க்கவ ந்ருஸிம்மன், யோகாநந்த ந்ருஸிம்மன், சத்ரவட ந்ருஸிம்மன், பாவந ந்ருஸிம்மன், என்னும் ஒன்பது மூர்த்திகளாயிருக்கும் ந்ருஸிம்ஹ மூர்த்திகளும்.

உகந்து உறையும் = விரும்பி நித்யவாஸம் செய்கிற

திருப்பதிகள் = ஒன்பது க்ஷேத்ரங்களுக்கும்

அன்புடனே பணி செய்யும் = பக்தியுடனே கைங்கர்யம் செய்கிறவரும்,
அற்புதனும் = (பகவதவதார மாகையாலே) ஆச்சரியமான ஞான சக்திகள் வாய்ந்தவரும்,
ஆசிரியன் = எழுபத்து நாலு பீடாதிபதிகளுக்கும் ஆசாரியருமான,
முன்பு உற்ற சடகோபன் =(ஸ்ரீமதஹோபில மடத்தில்) முதலாசாரியனாக அவதரித்த ஆதிவண் சடகோப யதீந்திர மஹா தேசிக னுடைய,
மொய் கழலை = (ஆச்ரிதர்களால் வணங்கப்படுகிற) திருவடிகளை,
ஏத்தி = துதித்து,
எழும் = (அகனுல்) மேன்மை பெற்று விளங்குகிற,
பண்பு உடைய பராங்குசன் தன் = நல்ல கல்யாண குணங்களையுடைய பராங்குச யதீந்த்ர மஹா தேசிகனுடைய,
பாத மலர் = திருவடித் தாமரைகளை,
பரவினம் = வணங்கினோம்.

கருத்து—ஸ்ரீமதஹோபிலத்தில் எழுந்தருளியிருக்கும் ஒன்பது ந்ருஸிம்ஹ மூர்த்திகளிடத்திலும் பக்தரான ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் ஆசாரிய ச்ரேஷ்டருடைய விஷயமாக அந்தாதி என்னும் ப்ரபந்தம் செய்து, அவரை வணங்கின ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹா தேசிகனை வணங்கினோம்.

நூல்

1. ஆதிமறை யுருவான ஆதிப்புள் வெற்புதனில்
சோதியென யுலகெல்லாம் சுகம்பெறவே வந்துதித்த
ஆதிகுரு நரசிங்கன் அருளாலே யோகியான
ஆதிவண்சீர் சடகோப னடியிணை யென்முடிமணியே.

உரை

[ப-ரை] ஆதி உமறை உருவான = ஆதியான வேதத்தை ரூபமாக வுடைய,
ஆதி புள் வெற்பு தனில் = (ஜகத் காரணபூதனான ஸ்ரீய: பதியினுடைய வாஹநமான) கருடனுடைய பெயர் பூண்ட மலையில்,
சோதி என = (தேஜோரூபமா யிருப்பதால்) ஜ்யோதிஸ் என்று சொல் லும்படியாக,
உலகு எல்லாம் சுகம் பெறவே = உலகத்தில் உள்ள ஸகல ப்ராணிகளும் சுகத்தை அடைவதற்காக,
வந்துஉதித்த = (ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து வந்து) அவதரித்த,
ஆதிகுரு நரசிங்கன் = முதற்குருவான சிங்கப்பிரானுடைய.
அருளாலே யோகியான = (கிருபையினலே) ப்ரேஷ மந்த்ரோபதேசம் பெற்று, ஸந்யாஸாச்ரமம் அடைந்த,

சீர் ஆதி வண் சடகோபன் = ஞான வைராக்யாதி கல்யாண குணங்களால் நிறைந்த ஆதிவண் சடகோப மஹா தேசிகனுடைய,
அடி இணை = (வேறொன்றும் நிகராக மாட்டாதாகையாலே ஒன்றுக்கொன்று உவமையாக இருக்கிற) இரண்டு திருவடிகளும்,
என் முடி மணியே = என்சிரோ ரத்நங்களாகும்.

குறிப்பு :—ஸர்வ ஜகத்தையும் படைப்பதற்கு முன் பகவான் வேதத்தை நினைத்துக்கொண்டு, அதில் சொல்லியபடியே, இந்த்ராதி தேவர்களையும் உலகத்தையும் படைப்பதற்குக் காரணமாக இருப்பதால், வேதம் ஆதிமறை எனப்பட்டது.

அஹோபிலத்தில் உள்ள மலையில் கருடன் தவம்செய்து பகவானை ஸாக்ஷாத்கரித்து, அவனுக்கு வாஹநமா யிருக்கும் பதத்தைப் பெற்றதாகவும், அதனால் இம்மலைக்குக் கருடாசலம் என்று பெயர் ஏற்பட்டதாகவும் அஹோபில மாகாத்ம்யம் கூறுகிறது.

கல்பாதியில் பிரமன் முதற்கொண்டு வேதோபதேசம் செய்தருளினமையால் நரசிங்கன் ஆதிகுரு எனப்பட்டான்.

கருத்து—முன்பு பரகால மாமுனியானவர் எம்பெருமானை, ஸாக்ஷாத் கரித்துத் திருவஷ்டாக்ஷர மந்த்ரோபதேசம் பெற்றது போலவே, நம் ஆதி வண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகனும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸாக்ஷாத்கரித்து, “[illegible] ஸ்ரீ [illegible]” என்கிறபடியே அவனிடத்தில் ப்ரேஷ மந்த்ரோபதேசம் பெற்ற மஹானுகையாலே, ஸ்ரீஸ்வாமியின் திருவடிகளை எப்பொழுதும் சிரஸா தரிப்பவர்களுக்கு ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளம் குளிர்ந்து ஸகல ஸ்ரேயஸ்ஸையும் அளிப்பானுகையாலே, ஸ்வாமியின் திருவடிகளை பரம போக்யமாக எப்பொழுதும் யாவரும் தலையில் தரித்து உஜ்ஜீவிக்க வேண்டும்.

[இந்த ஆதிவண்சடகோப மஹாதேசிகன் அந்தாதியும், மேலே உரை எழுதப்போகிற லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அடைக்கலப் பத்து என்னும் ப்ரபந்தமும், குலிங்க சகுனி வ்ருத்தாந்த வைதேசிகர்களும், அநுஷ்டாந பர்யவஸாயியான ஜ்ஞாநவான்களும், பரம காருணிகர்களுமான ஆசார்யோத்தமர்களால் அருளிச்செய்யப்பட்டதாகையால், இப் பாசுரங்கள் பரோபதேச மாத்ர ப்ரதாநமாக இல்லாமல் அவர்களின் அநுஷ்டாநத்தைத் தெரிவிக்கும் முறையில் அமைந்திருக்கின்றன. ஆயினும், மஹாங்களுடைய அநுஷ்டாநத்தை “[illegible]” என்று மற்றவர்களுக்கு வழிகாட்டியாகச் சொல்லியிருப்பதால், அவர்களுடைய அநுஷ்டாநத்தில் பரோபதேசமும் ஆர்த்திகமாக ஏற்படுவதால், இப்பாசுரங்களின் கருத்துக்கள் பரோபதேச ரூபமாக எழுதப்பட்டிருக்கின்றன வென்று அறிக.]

அவதாரிகை—அண்டாதிபனை சதுர்முகன் முதலானவர்களையும் த்ருண துல்யமாய் அநாதரித்து முகங்கொடுத்துப் பேசாதவன்

என்று உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஸர்வேஸ்வரனே ஆதரித்து அழைத்து மந்த்ரோபதேசம் பண்ணும்படியான மஹா பாக்யமானது ஸ்ரீமதாதி வண்சடகோப மஹாதேசிகனுக்கு இருந்ததென்று முன் பாசுரத்தில் சொல்லப்பட்டது. இதில், ஸ்வாமியை, பகவத் ராமானுஜனுடைய அவதாரமென்று சொல்லப்படுகிறது.

2. மணியான வாருயிரா மணிமுத்துத் தாழ்வடத்து
மணியாகப் பெரும்பூதூர்ப் புரந்தன்னில் வந்துதித்து
பிணிதீர்த்த தேசிகனே பின்னுமவன் வந்தனைத்தும்
பணியநின்ற சடகோபன் பதப்பூவை யடைந்தேனே.

மணியான ஆர் உருயிராம் மணி முத்துத் தாழ்வடத்து மணியாக = பெருமானுடைய மார்பில் கௌஸ்துபம் என்னும் ரத்ந ரூபமாக இருந்துகொண்டிருக்கும் ஸகல ஜீவராசிகளாகிற ஹாரத்தின் நாயக மணிபோல் எல்லாருக்கும் மேற்பட்ட பெருமை வாய்ந்தவராக,

பெரும்பூதூர் புரம் தன்னில் வந்து உதித்து = ஸ்ரீபெரும்பூதூர் என்னும் திரு நகரியில் வந்து அவதரித்து,

பிணி தீர்த்த தேசிகனே அவன் = ஸகலருக்கும் ஸம்ஸாரம் என்னும் வியாதியைப் போக்கும் வழியை உபதேசித்த ஜகத் பிரஸித்த கீர்த்தியான இராமானுசன் என்னும் அவனே,

பின்னும் வந்து = மறுபடியும் பின்னுள்ளோரின் க்ஷேமத்துக்காக வந்து,

அனைத்தும் பணிய நின்ற சடகோபன் = எல்லாரும் வணங்கும்படியாக அநந்த கல்யாணகுணங்களுடன் எழுந்தருளியிருந்த ஆதி வண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய,

பதம் பூவை அடைந்தேன் = திருவடித் தாமரையை ஶரணமாக அடைந்தேன்.

கருத்து—ஞானம் முதலியவைகளால் எல்லாரிலும் மேன்மை பெற்றவரான ஸ்ரீ பாஷ்யகாரரே, மறுபடியும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை வளர்க்கவேண்டும் என்கிற அவாவினாலே, ஆதி வண் சடகோப மஹாதேசிகனாக அவதரித்தார் என்று சொல்லும்படியாக, ஆங்காங்கு ஸஞ்சரித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தைத் தழைக்கவைத்த ஆதி வண்சடகோப மஹாதேசிகனுடைய பாதாம்புஜத்தைச் சரணமடைவதே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸ்வரூப ப்ராப்தம்.

அவதாரிகை—ஆச்ரித விரோதிகள் எத்துணை வலிமை வாய்ந்தவர்களாக இருந்தபோதிலும், அவர்களை யொழித்து ஆச்ரிதர்களை ரக்ஷிக்கும் ஸர்வ சக்தியை ஸ்வாராத்ய தைவமாகக்கொண்டவர் என்கிற பெருமை இந்தப் பாசுரத்தில் சொல்லப்படுகிறது.

3. அடைந்தென்று மடங்காத வாங்கார மாமலையை
தடந்திட்ட பெரியோனைத் தடுத்ததிற லிரணியனை
இடந்திட்ட நரசிங்க னிணையடியை யெப்பொழுதும்
இடங்கிட்டி யுறைகின்ற விம்முனியை யறிந்தேனே.

அடைந்து என்றும் அடங்காத ஆங்கார மாமலையை = ஸர்வப் பிராணிகளிடத்திலும் தானாகவே வந்து சேர்ந்துகொண்டு அவர்களால் போக்க முடியாததாய் இருந்துகொண்டிருக்கிற தானே "ஈச்வரன்" என்கிற அஹங்காரம் என்னும் பெரிய மலையை,

தடிந்திட்ட பெரியோனை = கிட்ட வரவொட்டாதபடி, தனக்கும் தன்னுடன் சேர்ந்து படித்தவர்களுக்கும் ஒழித்தவனானதால் பரம பூஜ்யனான ப்ரஹ்லாதனை,

தடுத்த = ஹிம்ஸித்தவனான

திறல் இரணியனை = அளவில்லாத வரபலம் பெற்ற ஹிரண்யகசிபு என்னும் அசுரனை,

இடந்திட்ட நரசிங்கன் = நாசம் செய்த ந்ருஸிம்ஹனுடைய

இணை அடியை = இரண்டு திருவடிகளையும்

எப்பொழுதும் இடங்கிட்டி உறைகின்ற = ஸதாகாலமும் ஸமீபித்து வணங்கிக்கொண்டிருக்கும்,

இம் முனியை யறிந்தேனே = இந்த ஆதி வண் சடகோப மஹா தேசிகனை த்யானம் செய்கிறேன்,

'எப்பொழுதும்' என்பதை 'அறிந்தேனே' என்பதோடும் கூட்டி உரைக்கலாம்.

கருத்து—திருமகளும் கிட்டுவதற்கு அஞ்சும் படியாயிருந்த நிலைமையிலும், பக்தாக்ரேஸரான ப்ரஹ்லாதாழ்வான் மட்டில் கிட்டி வந்து கூசாமல் பேசும்படியாக ப்ரஹ்லாதாழ்வான் ஸ்ரீந்ருஸிம்ஹனுக்குப் பரிபூர்ண வாத்ஸல்ய பாத்ரமாக இருந்ததுபோலவே, ஆதி வண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனும் எப்பொழுதும் அஞ்சாமல் கிட்டி வணங்கும்படியாக ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய பரிபூர்ண வாத்ஸல்யத்துக்குப் பாத்ரமாக இருந்தபடியால் ஸ்வாமியை முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை வணங்கி வழிபடுவதே ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திருவருளை அடைதற்கு நேரான வழி என்றும் ஸ்வாமியிடம், அபசாரப்படுபவர்கள் ஹிரண்யாஸுரன் பட்டபாடு படுவார்கள் என்றும் ஸூசிதம்.

அவதாரிகை—இதில் ஸ்வாமி ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடைய அவதாரம் என்று சொல்லப்படுகிறது.

(தொடரும்)

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸஞ்சார க்ரமம்

இருகரை கிராமத்தில் ஸ்ரீ வேதாந்த ஹம்ஸ த்ராதி.... ஸ்ரீரங்க நாயக தீந்த்ர மஹாதேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் முடிந்தவுடன், அவ்வூருக்கு ஸமீபத்திலிருக்கும் நீடாமங்கல வாஸிகளான சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்து ஸ்ரீ அழகியசிங்கரைத் தண்டன் ஸமர்ப்பித்து 'நீடாமங்கலததிற்கு எழுந்தருளி அங்கு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனை மங்களாசாஸனம்செய்து, அடியோங்கள் செய்யும் கிஞ்சித்காரங்களையும் திருவுள்ளம்பற்றி, அடியோங்களையும் அநுக்ரஹித்தருளவேண்டு'மென்று ப்ரார்த்திக்க, அவர்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி நீடாமங்கலத்திற்கு எழுந்தருளி, பருத்திச்சேரி ஸ்ரீ உ. வே. ஸந்தானமய்யங்காருடைய திருமாளிகையில் சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானை எழுந்தருளப்பண்ணிவைக்க, ஸ்ரீமான் ஸந்தானமையங்காரும், கோம்பூர் ராஜகோபாலையங்காரும் தமது க்ருகத்திற்கெழுந்தருளிய ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனை ஸேவித்து அளவிறந்த ஆனந்தமுடையவராய் 'வந்தருளி என் னெஞ்சிடம்கொண்ட வானவர் கொழுந்தே' என்கிறபடியே சிங்கவேழ்குன்றத்தில் நித்ய ஸூரிகளால் ஸேவிக்கப்படுகிற எம்பெருமான், 'நீசனேன் நிறைவொன்றுமிலேன்' என்றிருக்கும் அடியோங்களைப் பொருட்படுத்தி அநுக்ரஹித்தருளுவதற்காக 'ஸ்வ ஸௌஹார்த்தவாத்ஸல்ய' என்கிறபடியே இந்தக் குடிசையி 'லெழுந்தளியிருந்து' அடியோங்கள் திருவடி தொழும்படியான பாக்யம் இன்று நேர்ந்தபடியினால் 'அத்ய மே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிசா' என்கிறபடி' இன்றுதான் மானிடராய்ப் பிறந்த பயன் பெற்றோம்; இன்று தான் நமக்கு நல்விடிவு உண்டாயிற்று, என்று மிகவும் கொண்டாடி, அவ்வெம்பெருமான் பெருமைக்குத் தக்கவாறு போக்ய போகோபகரண போக ஸ்தாநாதிகளான அநேக ப்ரகாரங்களினால் உபசரித்ததோடு, ஷட்ரஸோபேதங்களான ததீயாராதனத்தினாலும் அங்கு எழுந்தருளி இருந்த பாகவதர்களையும் விசேஷமாக ஆராதித்தார்கள். அன்று ஸாயங்காலமே ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய ஸந்நிதியிலிருந்து அர்ச்சகர்கள் முதலான பரிஜநங்கள் திருமாலை திருப்பரியட்டம் முதலிய ப்ரஸாதங்களோடு ஸ்ரீ அழகியசிங்கரிடம் வந்து பெருமாள் மங்களாசாஸநத்திற்கு ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் அவ்வெம்பெருமான் திவ்யதிருமேனி ஸௌந்தர்யத்திற்குப் பொருந்திய பீதாம்பரம் முதலான உபஹார வர்க்கங்களுடன் ஸ்ரீஸந்நிதிக்கு எழுந்தருளி, அல்லலின்பம் அளவிறந்தெங்கும் அழகமர் சூழொளியனை அத்திருமகனுடைய திருமேனியைத் திருவடி, முதல் திருமுடி வரையில் ஸேவித்து கற்பா ரிராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ, என்கிற பாசுரத்தின்படி மற்றென்றின் திறத்ததல்லாத சிந்தையோடு அனுபவித்து க்ருதார்த்தராய் அருளப்பாடுடன் தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டம் ஸ்ரீ சடகோபன் திருத்துழாய் முதலிய பகவத் ப்ரஸாதங்களைப் பெற்றுப் பரிபூர்ண மனோரதத்தையுடையராய், நெஞ்சமே நீணராக இருந்த அத்திருமகன் திருமேனியை த்யானித்துக்கொண்டு தமதாஶ்ரமத்திற்கு எழுந்தருளினர்.

பிறகு அவ்வூருக்கு அருகேயிருக்கும் கோவில் வெண்ணி என்கிற அக்ரகார வாஸிகளான அநேகம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்ரீ அழகியசிங்கரிடம் வந்து தண்டன் ஸமர்ப்பித்து, தங்களூருக்கு எம்பெருமாள் எழுந்தருளி யதோசிதம் ஆராதிக்க ஆஸ்தை உள்ள அடியோங்களையும் அநுக்ரகித்தருளவேண்டு மென்று பிரார்த்திக்க, மறுதினமே அவ்வூருக் கெழுந்தருளி, அவ்வக்ரகார வாஸிகளான கல்யாண ராமையங்கார் முதலிய ஸ்ரீவைஷ்ணவர்களால் இளம் கமுகும் தெங்கும் வாழைகளும் மாந்தளிர் மயமான தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுத் திருவீதி நடுவில் அதிவிலக்ஷணமான திவ்யாலங்காரங்களால் அலங்கரிக்கப்பட்டு S. வரதாசாரியார் ஸ்வாமியின் திருமாளிகையில் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனை எழுந்தருளப்பண்ணிவைத்து, அளவிறந்த பக்தி ஶ்ரத்

தையோடு அவ்வெம்பெருமான் பெருமைக்குப் பொருந்தியபடி, ஆமின்சுவை யவை யாரொடு கூடிய அடிசிலாலும் பக்ஷ்ய போஜ்ய பலவர்க்கங்களாலும் அச்சிங்கப் பிரானையும் ஸ்ரீ அழகிய சிங்கரையும் அவரடியார்களுடைய குழாங்களையும் நாலைந்து தினங்கள் ஆராதித்து, ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனுடையவும் ஸ்ரீ அழகிய சிங்கருடையவும் பூர்ணமான க்ருபா ரஸத்திற்குப் பாத்ரமானர்கள்.

---

(2)

ஸ்ரீ அழகிய சிங்கர் கோவில் வெண்ணியில், பரமாஸ்திகர்களாயும் பக்தர்களாயும் உள்ள ஆஸ்ரிதஜநங்களால் அதிவ உபசாரம் பண்ணப்பட்டு, மஹாநுபாவர்களான வடுவூர்வாஸிகளான மகான்களுடைய மநோரதத்தின் ப்ரகாரம் அவ்வூர் எழுந்தருள, அவ்வூர் வாஸிகளும் வர்ஷுக வலாகஹத்தைக் கண்ட அநேக மயில்கள் போல், ஒரு மைவிருக்கும்பொழுதே கையில் பூர்ண கும்பத்துடனும் அவ்வூரி லெழுந்தருளி யிருக்கும் ஸௌந்தர்ய நிதியான சக்ரவர்த்தித் திருமகனுடைய அரி மனத்துடன் தாங்களும் அரிய பெரிய மனத்துடனும் வந்தெதிர்கொண்டு அழைத்துச் செல்ல, அவ்வூர் வீதியை அழகிய சிங்கர் அலங்கரிக்கும் அந்த ஸமயத்தில் அநந்தமான ஆநந்தத்தை அடைந்து, 'ഉദ്ഗ്രീവികാഷായ ചിരാന്നൃശംസഷേണ വക്ഷശ്രീശ്രീ സഹസ്രാംഭവാ' என்கிறபடியே, அழகிய சிங்கர் அடிவைக்கு மிடத்தை நோக்கி அநுஸந்தித்துக்கொண்டு, ஸ்ரீ அழகியசிங்கருடனேயே ஸ்ரீ சக்கரவர்த்தித் திருமகன் ஸ்ரீஸந்நிதியின் முன்னிலையை யடைய, ஸ்ரீ சக்கரவர்த்தி திருமகனும் வந்திருக்கும் ஸ்வாமி திருநாமத்திற்கு அந்த ரங்கசடாரி என்று அதற்கு சரியாக அந்த ரங்க சடாரியை அனுப்பி ஸந்நிதிக்குள் அழைத்து, அழகியசிங்கரை ஆனந்த பரவசராய் ஆக்க, அழகியசிங்கரும், அழகுக்கே யிருப்பிடமாயும், அனேக ஆபரணலங்கருதனையும் அதிவ மநோஹரனையும் ஆனந்தகரனையும் ஆஸ்ரித வரதான நிபுணனையும் (ഗംഭീരരാജശ്രിയം ലോകവിഖ്യാതപൗരുഷം | ദീർഘബാഹും) என்ற எல்லா வாக்யங்களுக்கும் வ்யாக்யாநம் செய்து காண்பிக்கும் விக்ரஹ விஶேஷ விஶிஷ்டனையும் உள்ள சக்ரவர்த்தித் திருமகனைக் கண்களால் கண்டு களித்து ஸ்ரீராமசந்த்ரனுடைய தர்சநத்தால் அபிவ்ருத்தாமன ஆனந்தக் கடலின் ப்ரவாஹம்போல் ஆனந்தபாஷ்பத்தைப் பெறுக்கி, அக்கடலிலே நிமக்நராய் புளகாங்கித காத்ரராய்க் கொண்டு சக்ரவர்த்தித் திருமகனுடைய கோதண்ட மண்டிதங்களாயும் நீண்டழகியதாயுமுள்ள திருக்கைகளையும், மிருதுவான சிரிப்பால் எல்லோரையும் ப்ரீதியாய் விசாரிக்கும்போலிருக்கும் தன்மையையும், கன்னங்களில் மார்த்தவத்தையும், கண்களில் கடாக்ஷத்தின் பெருமையையும், இரண்டு கண்களுக்கும் எல்லை நிலமாயுள்ள நாஸிகையின் எல்லையில்லாத அழகையும், தன்னைக்காட்டிலும் அழகென்றேபோல் நாஸிகையாலேயே தாங்கிக் காண்பிக்கப்பட்ட அஷ்டமீ சந்திரன்போலுள்ள திருநெற்றியின் ஸந்நிவேசத்தையும், அதிலே பாக்யத்தால் பதம்பெற்ற ரத்ந திலகத்தையும் கோவைப்பழத்தையும் அழகால் கீழே தள்ளும் கீழ் உதடையவும் மேலுதடையவும் ஸௌபாக்யத்தையும் கிட்ட நிற்கும் அநுபாவகர்களுக்கு அடிக்கடி எடுத்துரைத்து ஆராத காதல் கொண்டு உள்ளம் கவர்ந்திடும் இந்த ரூபத்திற்கு அநுரூபமாய் ஸமீபத்தில் ப்ரகாசிக்கும் ஸீதையென்னும் பொற்கொடியை ஸேவித்து இவ்விரண்டு விக்ரஹத்தையுமே தனித்தனியே பார்த்த திருவடி, തുല്യശീലവയോവൃത്താം തുല്യാഭിജനലക്ഷണാം | രാഘവോഽർഹതി വൈദേഹീം തം ചേയമസിതേക്ഷണാ என்று பாடி நமக்காகச் சேர்த்துவைத்த மகாநுபாவன் இதோ ஸௌமித்ரியின் ஸமீபத்தில் என்று மாருதியினிடத்தில் மாருதமனத்தை அருத்தி, திரும்பவும் சோகந் தவிர்க்கும் சுருதிப் பொருளாயும் காகம் பிழைத்திடக் கண்ணிழவே செய்தவனையும் எல்லோருக்கும் நமக்கும் சரணையும் உள்ள கருணைக் கடலான காகுத்தனைக் கண்கொட்டாமல் மங்களாசாஸனம் செய்து அந்த ராகவஸிம்ஹத்திற்கு எதிர் நிலையில் எழுந்தருள பண்ணியிருக்கும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் ஆராதித்து, அந்த ஸிம்ஹத்தையும் நோக்கியிருக்கும் கவிதார்க்கிக ஸிம்ஹத்தையும் மங்களாசாஸநம் செய்து, அவ்வூரிலிருக்கும் வைஷ்ணவ ஸிம்ஹர்களால் மிகுந்த

பக்தியுடன் ஸர்வவித உபசாரங்களாலும் ஆராதிக்கப்பட்ட யதி ஸிம்ஹமானது மூன்று நாள் அவ்வூரில் எல்லோரையும் அநுக்ரகித்த ப்ரகாரம் வாசாமகோசரமாகும்.

அடியேன் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனுடைய விரகம் பெற்று வருந்துகிற நிலைமையில், ஸ்ரீ அழகியசிங்கர் சக்ரவர்த்தித் திருமகனை மங்களாசாஸநம் செய்ததை ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியைக்கு நிவேதிப்பது விரஹவிநோதகமாகுமென்று விண்ணப்பம் செய்துகொண்டேன்.

வில்லூர், நடாதூர், ஆசுகவி, சிரோமணி, ஸ்ரீநிவாஸராகவாசாரியர்.

---

(3)

ஸ்ரீஅழகியசிங்கர் திருக்குடந்தையில் ஸ்ரீஆராவமுதனுடைய மங்களாசாஸநம்.

ஸ்ரீஅழகியசிங்கர் 'சீரார் செர்நெல் கவரிவீசும் செழுநீர் திருக்குடந்தை என்றும், 'செம்மா கமலம் செழுநீர்மிசை கண்மலரும் திருக்குடந்தை' என்றும் செழுவொண்பழனக், குடந்தை என்றும் சாலிவேலி தண்வயல் தடக்கிடங்கும் பூம்பொழில் கோலமாட நீடுதண் குடந்தை, என்றும் அருளிச்செய்கிறபடியே, இம்மண்ணுலகில் நீர்வளம் நிலவளம் மிக்கதாய், விலங்கு நூலர் வேதநாவர் நீதியான கேள்வியார் வளங்கொள் குடந்தை, என்றும், 'நலத்தார் மிக்கார் குடந்தை' என்றும், 'வாழ்தொல் புகழார் குடந்தை' என்றும் அருளிச்செய்கிறபடியே, செழுமாமணிகளான ஸ்ரீவைஷ்ணவ க்ரந்தங்களுடைய சேர்த்தியாலு மலங்கரிக்கப்பட்டதாய், கங்கையிற் புனிதமாய், கடந்த கால் பரந்த காவிரிக் கரையிலிருக்கும் திருக்குடந்தையில் ஏரார்கோல திகழக்கிடக்கு மாராவமுதனுடைய திருவடி தொழுவதில் ஆஸ்தாதிசயத்தினலே தமது திருவாராதனமான சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானேடும் அனந்தங்களான அவ்வெம்பெருமானுடைய பரிஜன பரிச்சதங்களோடும் அவனுடைய திருப்புகழ்கள் பலவும் பாடவல்ல தூராத மனக் காதலுடைய தொண்டர்களுடைய குழாங்களோடும் ஸ்ரீஆராவமுதாழ்வானுடைய ஸந்நிதியின் திருக்கோபுர வாசலுள்ளே எழுந்தருளி, அங்கே கோவில் கொண்டு கவிதார்க்கிகஸிம்ஹமென்னும் வேதாந்தாசாரியரென்றும் கொண்டாடப்பட்டு, ஸ்ரீஆராவமுதனுடையவும் கோமளவல்லித் தாயாருடையவும் பூர்ண க்ருபைக்குப் பாத்திரமான தூப்புலம்மானையும் ஓராயிரமா யுலகேழளிக்கும் பேராயிரம் கொண்ட அவ்வெம்பெருமானுடைய அர்ச்சாரூப அழகின் பெருமைக்கு அனுகுணமாக ஆராவமுதனென்றோர் அபூர்வமான திருநாமம் சாத்தி அவ்வாராவமுதனுக்கும் ஓரமுத மென்னலாம்படியாகத் தித்தித்திருக்கும் செவிக்கினிய செஞ்சொல்லான திருவாய்மொழியை அவன் திருமுன்பே பாடி, அதனல் இவ்வுலகமெல்லாம் உஜ்ஜீவித்துப் போகும்படி செய்தருளியபடியினலே புகழ் மலிந்த பாமன்னுமாறனென்று பாடப்பெற்ற நம்மாழ்வாரையும் திருவடிதொழுது, ஸந்நிதியிலுள்ளே சென்று, அங்கெழுந்தருளியிருக்கிற ஜயவிஜயர்களுடைய திருவடி பணிந்து, நியமனம் பெற்று தாயார் ஸந்நிதியின் முன்பே ஸேவித்து, ஸ்ரீகோமளவல்லித் தாயாருடைய இணையில்லாத வடிவழுகுக் கனுகுணமான திவ்ய பீதாம்பரத்தோடும், புஷ்பமாலா பழவர்க்கங்களோடும் சென்று, அவ்வுபஹாரவர்க்கங்களை அத்திருமகளின் திருமுன்பே ஸமர்ப்பித்து, அத்தாயாருடைய திவ்யகடாக்ஷத்தைப் பூர்ணமாகப் பெற்று ஸ்ரீஸூக்தம், சதுஶ்லோகீ ஸ்ரீகுணரத்நகோசம் ஸ்ரீஸ்துதி முதலிய ஸ்தோத்ர வாக்யங்களினல் அத்திருமகளின் கல்யாணகுணங்களை எல்லாம் வாயார வாழ்த்தி, பரிபூர்ண மனோரதராய் நிற்க, அங்கெழுந்தருளியிருந்த அர்ச்சகர், ஸ்ரீஅழகியசிங்கருக்கு அருளப்பாடுடன் தீர்த்தம் திருமாலை அருதிப் பரியட்டம் அபய ஹஸ்தங்களோடு ஸ்ரீசடகோபன் ப்ரஸாதங்களை ப்ரஸாதிக்க, ஸ்ரீ அழகியசிங்கர் அவ்வரிசைகளெல்லாம் ஸம்பூர்ணமாகப் பெற்றுப் பரிபூர்ண மனோரதராய்த் தாயாருடைய நியமனத்தைம் பெற்று வலம் செய்து ஸ்ரீஆராவமுதனுடைய ஸந்நிதிக்கு எழுந்தருளி, ஸந்நிதி வாசலில் ஸேவித்து, அவ்வாராத வருளமுதத்தினுடைய திவ்ய திருமேனி ஸௌந்தர்

யத்திற்குப் பொருந்தினதான திவ்ய பீதாம்பரத்தோடும், புஷ்பமாலைகள் பழவர்க்கங்களோடும் ஆராவமுத னருகே சென்று, அவ்வுபஹாரங்களை எல்லாம் யதோசிதமாக அங்கு ஸமர்ப்பிக்கச்செய்து, அங்கு குன்றாடு கொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல் நின்றாடு கன மயில்போல் நிறமுடையவராய், அரவணைமேல் துயிலமர்ந்த பெரியபெருமாளையும், அவ்வெம்பெருமானுக் கெதிரில் 'கட்டுரைக்கில் தாமரைநின் கண்பாதம் கையொவ்வா' என்கிறபடியே ஒப்பிலாத வழகையுடைய திவ்யாவயவங்களோ டிருக்கையாலே, 'வு⁰ஹஸாம் ரூபஷீவிதூாவஹாரியான க்ருஷ்ணுதி ரூபங்களுடைய ஸௌந்தர்யங்களெல்லா மிவ்வர்ச்சா விக்ரகத்தி னழகில் ஏகதேசமென்று சொல்லலாம்படியாய், அழகு தத்வமே ஒருருவ மெடுத்து நிற்கின்றதோ என்று நினைக்கலாம்படியாய், செம்பவள மிவர்வாயின் வண்ணம் தேவரிவரது குலம் சொல்லில் அம்பவளத் திரனேயு மொப்பர் அச்சோ வொருவ ரழகியவா' என்கிறபடியே ஆச்சர்யமான திருமேனி அழகோடும் கமலவண்ணமான கண்ணும் வாயும் கைத்தலமும் மெல்லடியும் நான்கு தோளும் சங்கம் சக்ரம் சார்ங்கம் கதை முதலிய திவ்யாயுதங்களோடும் நிற்கின்ற மற்றொரு ஆராவமுதத் திருமேனியையும் கண்ணுறக் கண்டு களித்து 'ஹ்ருதி க்ருஷ்ணம் நயநவிஷயத்வம் ந ஶேகு: கணுாவிஷ்டம் ந ஸாதி தஒதா யசு ஸதாஸாதூஷூ' என்றும், ரா⁰ஜேத்³ரநாமதா ரூபஷீரக்ஷாவி ந நிவதூதெ என்றும் சொல்லுகிறபடியே அத்திருமேனியிடம் சென்ற திருக்கண்களோடு உள் அடங்காத ஆனந்தாம்ருதத்தின் பரீவாஹமாக வாயார வாழ்த்த வாசைப்பட்டு, ஆராவமுதே என்று தொடங்கின பாசுரம் மேல் சொல்ல முடியாதே, அதையே திரும்பத்திரும்பச் சொல்லும் வாகிந்தரியத்தோடு இப்படி 'தந்நஸ்ஸாஹ்ஸாவ: தமிவெஷா ஹூஷாத்ரிகா: |' என்கிறபடியே சிந்திக்கும் திசைக்கும் தேரும் கைகூப்பும் என்கிற தசையை யடைந்து, கொஞ்சகாலம் சென்றபிறகு தெளிந்து, அப்புருஷோத்தமனுடைய திருக்கல்யாணகுணங்களை யெல்லாம் ஜிதம்தெ முதலான ஸ்தோத்ரங்களில் படிக்கும் கத்ய த்ரயங்களிலருளிச் செய்திருக்கிறபடிக்கும் அனுஸந்திக்க ஆரம்பித்து, 'சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவாய் ஒன்றினோடும் செல்கின்ற தென் நெஞ்சமே' என்கிறபடியே தம்மை நீத்துத் திரிகின்ற மனதோடிருந்துஅதனாலே ஸம்பூர்ணமாக அக்குணங்களை அனுபவிக்க சக்தியில்லாது 'ஸவபூ மரஸ: – ஸவபூரஸ:' என்கிறபடியே அவனுடைய போக்யதையை நினைத்துக் 'குடந்தை மேய குருமணித்திரளை இன்பப்பாவினை பச்சைத்தேனை பைம்பொன்னை அமரர் சென்னிப் பூவினை அரும்பினை அலறை அடியேன் மனத்தாசையை அமுதம் பொழியும் சுவைக் கரும்பினைக் கட்டியைத் தேனை யமுதை' என்கிறபடியே ஆராவமுதனுடைய போக்யதாதிசயத்தை யனுபவித்து, அதற்குமுன் நீண்ட காலமாக அவ்வெம்பெருமான் விஷயத்தில் கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டென் கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும்நாளே என்றும், என்வாயார வென்றுகொலோ வாழ்த்து நாளே என்றும், அம்மான் தன்னடியிணைக் கீழவர்களிட்டடியவரோ டென்றுகொலோ வணுகுநாளே என்றும், கோவினை நாவுற வழுத்தி என்றன் கைகள் கொய்மலர்த்தூய் என்றுகொலோ கூப்புநாளே என்றும் மணிவண்ணனம்மானைக் கண்டுகொண்டென் மலர்ச் சென்னி என்றுகொலோ வணங்குநாளே என்றும், நிறந்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள் நீர்மல்க என்றுகொலோ நிற்குநாளே என்றும் மனோரதித்திருந்த மனோரதங்களை எல்லாம் ஸம்பூர்ணமாக முடியானில்படியே யனுபவித்துநிற்க, இப்படி ஆராவமுதாழ்வா னிடத்திலிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய பக்தியினுடைய பெருமையைக் கண்டு போரவுகந்திருந்த அர்ச்சகர், ஸ்ரீ அழகிய சிங்கருக்கு அருளப்பாடிட்டு, தீர்த்தம் துளஸி திருமாலை அறுதிப் பரியட்டம் அபய ஹஸ்தங்களுடன் ஸ்ரீசடகோபனையும் பிரஸாதித்து, பகவத் ப்ரஸாதங்களையும் ஸமர்ப்பிக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீ ஆராவமுதன் அர்ச்சகமுகமாக அருளின வரிசைகளையெல்லாம் ஸம்பூர்ணமாகப் பெற்று அளவிறந்த ஆனந்த ஸமுத்திரத்தி லாழ்ந்த மனதுடையவராய்த் திருவீதி வலம் வந்து மடத்திற்கு எழுந்தருளினர்,

ஸ்ரீ அழகியசிங்கர் திருக்குடந்தையில் சற்றேறக்குறைய ஒருமாஸ காலம் வரையில் எழுந்தருளி இருந்தார். அந்தக் காலத்தில், திருக்குடந்தை ஸ்ரீ அழகியசிங்கர்

குமாரரான ஸ்ரீ வெ. ஜகன்னாதாசார்யர் ஸ்வாமி, - ஜட்ஜி - திவான்பகதூர் ஸ்ரீ வெ. இராகவய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ வெ. இராஜகோபாலய்யங்கார், ஸ்ரீ வெ. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ வெ. பிச்சுவைப்பங்கார் ஸ்வாமி முதலான ஸ்ரீ வைஷ்ண வர்கள் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனையும் ஸ்ரீ அழகிய சிங்கரையும் தங்கள் தங்கள் திரு மாளிகையில் எழுந்தருளப்பண்ணி அதிகமான ச்ரத்தையுட னாராதித்தார்கள்.

இத்தோடு மற்றும் சில பகவத் பக்தியுள்ளவர்களான ஸ்த்ரீகளும், நான் காவது வர்ணத்தார்களும், அவ் வெம்பெருமானுடைய நித்ய ததீயாராதனத்தில் யதா சக்தி அந்வயித்து க்ருதார்த்தரானார்கள். ஒவ்வொரு தினத்திலும் 500, 600 பெயர் களுக்குக் குறையாமல் ததீயாராதனங்கள் நடந்துவந்தன. இப்படி திருக்குடந்தையில் நடந்த ஸ்ரீசிங்கப்பிரானுடைய கைங்கர்யங்களில் அவரவர்களே விசேஷ ச்ரத்தையோடு அந்வயித்து நடத்தி, அவாவர்கள் க்ருதார்த்தராகும்படி தனது ச்ரமத்தைக் கவனிக் காமல் அலைந்து செய்வித்த அண்ணாவையங்கார் என்கிற, ஸ்ரீ உ. வெ. நரஸிம்மா சாரியருடைய பகவத் பக்தி ச்ரத்தைகளுடைய பெருமை மிகவும் சிலாகிக்கக்கூடிய தாக இருந்தது. புத். வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்.

---

(4)

ஸ்ரீ அழகியசிங்கரின் உத்ஸவம்

துவரிமான் அக்ரஹாரம், மதுரைக்கு மூன்று மைல் மேற்கே யுள்ள ஒரு நல்ல அக்ரஹாரம். இது வைகை நதிக்கரையின்மேல் உள்ளது; நிலவளம் நீர்வளம் மிகவும் பொருந்தியது. ஏகாந்தவாஸத்திற்கு மிகவும் யோக்யமானது. இந்த அக்ரஹாரத்தில், 36-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனை (1888-1898) ராமநாத புரம் ஸ்ரீ உ. வே. ஸ்ரீ சேஷாத்ரி அய்யங்கார் ஸ்வாமி தாம் ஏகதேசத்தில் தமது சொந்தச் செலவில் ஒரு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் ஆராதித்துள்ளார்.

40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷித்தராய் எழுந்தருளியிருத்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் (1913—1923) இந்த அக்ரஹாரத்தில் துந்துபி௵ தைமீ௳ திருநாட் டிற்கு எழுந்தருளிவிட்டார் (14—1—1923).

இவ்வழகிய சிங்கரின் திவ்யமங்கள விக்ரஹத்தை உடனே அவ்விடத்தில் திருப்ரதிஷ்டை செய்யவேண்டுமென்று அநேக சிஷ்யர்கள் ப்ரவர்த்தி செய்ததற்கு, சிலகாலம் கழிந்தபிறகுதான் திருப்ரதிஷ்டை செய்வது உசிதமென்று ஸ்ரீ அழகிய சிங்கரும் (41-வது பட்டம்) ஸ்ரீ கார்யம் கிடாம்பி ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி முதலிய ப்ரமுகர்களும் திருவுள்ளம் பற்றியபடியால், அது அப்பொழுது நடக்காமல் போயிற்று. விபவ௵ ஆவணிமீ௳ (20—6—1928) ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்ய மங்கள விக்ரஹங்கள் ப்ருந்தாவனத்தில் திருப்ரதிஷ்டை செய்யப்பட்டன.

அதுமுதல் ஸ்ரீ அழகியசிங்கருக்கு உத்ஸவம் செய்யவேண்டுமென்று ப்ரவர்த் திகள் நடந்துவந்தன. இப்பொழுது ஆஸ்தானாதிபதியாய் எழுந்தருளியிருந்து கொண்டு, சிஷ்யர்களின் ஶ்ரேயஸ்ஸையே தனக்கு வகுத்த கைங்கர்யமாய்த் திருவுள்ளம் பற்றி, அதற்கு அறிகுறியாக அநேக ஸத்கார்யங்களைச் செய்துகொண்டு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திவ்ய நியமனத்தின்பேரில் இந்த சித்ரபானு௵ ஆனிமீ௳ 2ம்வ முதல் பத்து தினங்களாய் உத்ஸவம் மிகவும் அதிசயிக்கத்தக்க ரீதியில் நடத்தப்பட்டது.

தினப்படி காலையில் மூலபேரத்திற்கும், ஸாயங்காலங்களில் உத்ஸவ பேரத் திற்கும், ஸ்நபன திருமஞ்சனமும் காலையிலும், ராத்ரிகளிலும் வீதி புறப்பாடுகளும், வேதபாராயண அத்யாபக கோஷ்டிகளும், மிகவும் நன்றாகவும், அழகாகவும் இருந் தன. ஒவ்வொரு தினத்திலும் ஸ்வாமிகள் பலர் போட்டி போட்டுக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கரின் கைங்கர்யத்தை நன்கு பூர்த்திசெய்து வைத்தார்கள்.

ஸ்ரீ அழகியசிங்கர் திவ்ய நியமனத்தின்பேரில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வுத்ஸவ மானது யாதொரு விக்னமு மில்லாமல் வருஷ ப்ரதிவருஷம் இப்படியே நடக்கும்படி, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அனுக்ரஹித்தருளவேணும்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

காரயித்ருத்வ நிரூபணம்

(ஸ்ரீ உப. வித்வான் உத்தமூர் வீரராகவாசார்யர்)

"ஜீவனுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈச்வரன் காரயிதா அன்று; அப்பொழுது உபேக்ஷித்தே இருக்கிறான்; என்று ச்ருத ப்ரகாசிகாசார்ய ப்ரப்ருதிகளால் ஆதரிக்கப்பட்டுள்ள மதத்தை '[illegible]' என்று ஸ்ரீ தேசிகன் தூஷித்திருக்கிறார்" என்பதாக நமது ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸம்பாதக ஸ்வாமி பங்குனிமாதத்து (3-வது) ஸஞ்சிகையில் எழுதியிருக்கிறார். "இவ்விஷயத்தில் இவ்வாசார்யர்களுக்கு ஸாமரஸ்யமே உளது" என்பதாக அடியேன் செய்துகொண்ட விஜ்ஞாபநத்தையும் அடுத்த ஸஞ்சிகையில் ஸங்க்ரஹித்து இந்த ஸாமரஸ்ய நிர்வாஹத்தில் தமக்கும் திருவுள்ளம் இருப்பதாகத் தோன்றும் ரீதியில் முடிவுரையிட்டருளியு மிருக்கிறார்.

(1) ஆகிலும் வைகாசிமீ ஸஞ்சிகையில் "ஜீவன்களின் ப்ரதம ப்ரவ்ருத்தி" என்கிற குறிப்பின்கீழ் மறுபடியும் அபிப்பிராய பேதத்தையே அந்த ஸ்வாமி திருவுள்ளம்பற்றி யோர் வ்யாஸம் அருளியிருப்பதால் ஏற்கெனவே அடியேன் செய்துகொண்ட விஜ்ஞாபநமானது அந்த ஸ்வாமிக்கு ஹ்ருதயங்கமமாகத் தோன்றவில்லை யென்றே அடியேன் நினைத்திருப்பதால் சற்று தெளிவான முறையில் மறுபடியும் அதே விஷயத்தில் இந்த வ்யாஸத்தை விஜ்ஞாபநம் செய்யவேண்டியதாயிற்று.

(2) நிற்கச்சென்ற மாதத்து ஸஞ்சிகை யில் "एष ह्येव साधु कर्म कारयति......................निनीषति" என்கிற கௌஷீதகி வாக்யங்களை உதாஹரித்து இவை அதிமாத்ரம் ஆநுகூல்யத்திலும் அதிக ப்ராதிகூல்யத்திலும் வ்யவஸ்திதர்களான அதிகாரிகளைப்பற்றியவை என்பதான ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளத்தைக் காட்டி 'இம்மாதிரி விஷய விபாகம் ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்தியில் தென்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது; ஸர்வ ஸாதாரணமாக வ்யவஹரிக்கப்பட்டது போல் தோன்றுகிறது' என்பதாக ஸ்ரீ பாஷ்யகாரருக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும் அபிப்ராய பேத மிருப்பதாகக் காட்டியிருக்கிறார்.

(3) "வஞ்சிக்கும் ஸ்வபாவம் கல்யாண குணங்களுள் ஒன்றாகுமோ! பகவானிடத்தில் விப்ரலம்ப இச்சையை நாம் எப்படி ஒத்துக்கொள்ளக்கூடும் என்னும் சங்கை கொஞ்சம் பாதிக்கின்றது" என்பதாக சங்கையும் அதே ஸஞ்சிகையில் ஆவிஷ் கரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் முதல் இரண்டு விஷயங்களும் ஸ்ரீ பாஷ்யகாரர் ச்ருத ப்ரகாசிகாசார்யர் முதலிய ஆசார்யரின் ஸ்ரீ ஸூக்திகளோடு ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திக்கு முரண்பாடு இருப்பதாக ஸ்பஷ்டமாகக் காட்டுகிறதாலும் மூன்றாவது சங்கை எம்பெருமானுடைய கல்யாண குணத்தைப் பற்றியதாகையாலும் இம்மூன்றுக்கும் ஸமாதாநத்தை யதாமதி விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன்.

(1) "ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈச்வரன் காரயிதா அன்று. உபேக்ஷகனே" என்பதாக ச்ருத ப்ரகாசிகாசார்ய ப்ரப்ருதிகளின் மதம் என்பதற்கில்லை. "உத்தர கார்யங்களைப் பற்ற ஹேதுக்களான ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைக் கொடுக்குமது சேதநர்

ப்க்கல் இவனுக்கு விசேஷித்து ப்ரேரகத்வம். அசேதநங்களில் ப்ரேரகத்வமாவது கார்யாந்தரானுகுண விகார மாத்ர ஹேதுத்வம் இவைத்தாலே காரயிதாவென்றும் ப்ரவர்த்தகனென்றும் சொல்லுகிறது'' என்றும் ''ஸர்வ கார்ய விஷய வ்யாபாரவானுன ஈசவரன் க்ஷேத்ரஜ்ஞருடைய விஷம ஸ்ருஷ்டி ஹிதாஹித ப்ரேரணுதிகளில் விசேஷ காரணமன்றிக்கே அவர்களுடைய கர்ம வைஷம்யம் அவைத்துக்கு ப்ரயோஜக மாகையாலே இவனை உதாஸீந னென்கிறது'' என்றும் காரயித்ருத்வத்திற்கும் உபேக்ஷகத்வத்திற்கு முள்ள ஸ்வரூப பேதத்தை ஆசார்யன் பரமத பங்கத்தில் பரதத்வாதிகாரத்திலே விவேசநம் செய்தருளுகிறார். ப்ரேரகத்வ ஸ்வரூபத்தை நிரூபிக்குமிடத்தில் ''விசேஷித்து'' என்கிற பதமானது அசேதந ஸாதாரணமல்லாமையைக் குறிக்கின்றது என்பது மேலே அசேதநங்களில் ப்ரேரகத்வத்தைத் தனித்துக் காட்டுவதால் ஸ்பஷ்டமாகிறது. ஆகையால் இங்கு ''விசேஷித்து'' என்பதனுல் உத்தர கார்யங்களைப் பற்ற பொதுவான காரணத்வத்தை பாதிப்பதாகக் கொள்ளக் கூடாது. இப்படிக்குப் பொதுவாக உத்தர கார்யோபயுக்த ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைக் கொடுக்கையாகிற காரயித்ருவத்தை ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யரும் கண்டரவேண உபபாதநம் செய்திருக்கிருர். பராயத்தாதிகரண ச்ருதப்ரகாசிகை இங்கு கவனிக்கத்தக்கது. அதாவது—''முதலில் கரணகளேபராதிகளை ஸ்ருஷ்டிப்பதும் அவற்றைச் சேதநருக்கு அருளுவதும் பிறகு அவற்றைத் தான் வ்யாபித்து தரிப்பதும் அவற்றைத் தரிப்பதற்குறிய ஸாமர்த்யத்தைச் சேதநருக்குக் கொடுப்பதுமாகிய் இவ்வழியில் சேதநருடைய ப்ரதம ப்ரவர்த்திக்குரிய இச்சை முதலியவற்றிலும் பரமாத்மா காரணமாகிருன் என்பதாக ஸித்தாந்தத்தின் ஆரம்பத்தில் உபபாதநம் செய்தருளினர். அதற்கு மேலும் சில விசேஷ காரணங்களையும் உதாஹரித்து இவற்றோடு கூடிய மூன் கூறிய ஸாதாரண காரணங்களால் ப்ராதமிக இச்சா ப்ரயத்நங்கள் ஏற்படுகின்றன. அவற்றில் ஈசுவரனுடைய விசேஷோபகாரமில்லையாகையால் அவனை உதாஸீநன் என்பது யுக்தம் என்ருர். மேலும் ''பரமாத்மா ச தயோருதாஸீந:'' என்கிற வாக்யத்தினுல் ப்ராதமிக இச்சா ப்ரயத்நங்களில் எம்பெருமான் ஸாதாரண காரணமாகிருன் என்பதைச் சொன்னுர். இங்கு உதாஸீந: என்பதற்கு ஸாதாரணேபகாரகன் என்பதாக அர்த்தம். மேலே இரண்டாவது இச்சா ப்ரவ்ருத்தி முதலியவற்றில் விசேஷோபகாரகன் என்பதைச் சொல்லியிருப்பதால் இங்கு இந்த அர்த்தம் என்று ஸ்பஷ்டமாகின்றது.

உபஸம்ஹாரத்திலும் ''பாஹ்யாந்த:கரணவ்யாப்தி தத்த்ருத்யாதாரணை: | ஸாதாரணோபகாரேச்சாதிஷ்வீஶ: காரணம் பர:'' என்கிற ச்லோகத்தினுல் ப்ராதமிக இச்சாதிகளுக்கு முன் கூறிய வகையில் எம்பெருமான் ஸாதாரண காரணமாகிருன் என்பதை ஸங்க்ரஹித்தருளினர். இப்படி உபக்ரமோபஸம்ஹாராப்யாஸங்களாகிற தாத்பர்ய லிங்கங்களால் ப்ராதமிகேச்சா ப்ரயத்நாதிகளுக்குக் காரணமாகிருன் ஈச்வரன் என்பதே ச்ருதப்ரகாசிகாசார்யர் திருவுள்ளமென்று தெளிவாகிறது, இப்படி ஸ்பஷ்டமாயிருக்கிற இந்த வாக்யங்களையே நமது பத்ராதிபர் ஸ்வாமி உதாஹரித்து ''இச்சாஜநகத்வரூபமான ப்ரேரகத்வம் ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் பரமாத்மாவுக்கு இல்லை'' என்பது இவற்ருல் ஏற்படுவதாக 5-வது ஸஞ்சிகையில் நிஷ்கர்ஷம் செய்திருப்பது எப்படி உபபந்நம்? என்பதை அந்த ஸ்வாமியே மறுபடி விமர்சம் செய்தருளவேணும். இல்லை என்கிற பதத்தின் ஸ்தாநத்தில் உண்டு என்று நிகமநம் செய்வதன்ருே உதாஹ்ருத வாக்யாநு குணமாகும்! ஸ்ரீமந் ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலே ஜீவபரிச்சேதத்தில் ஜீவாத்மாவினுடைய கர்த்ருத்வத்தைப் ப்ரஸ்தாவித்து ''தச்ச ஸாமாந்யத: பரப்ரேரணஹேதுகமிதி கதமாத்மாஸ்யாதிஷ்டாதா; பராதீநஸ்வாதந்த்ர்யே தஸ்மிந் ஶாஸ்த்ரவிஷயத்வம் ப்ரஸங்கிதம்'' என்று அருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திக்கு வ்யாக்யாநம் செய்யுமிடத்தில் ''ஸாமாந்யத:'' இதி கார்யமாத்ரேஷ்வபி ஸாதாரணதயா காரயித்ருத்வமிதி பாவ: விஶிஷ்டேஷு ஶாஸ்த்ரவிஹிதப்ரவ்ருத்திஷ்வீஶ்வரஸ்ய காரயித்ருத்வஸ்ய தாத்ருக்ஷவைஷம்யஸ்ய வக்தவ்யத்வாத் | உக்தஞ்ச ஶ்ருதப்ரகாஶிகாயாம் ''வைஷம்யம் யாவதா நஸ்யாத் ஸங்கோசோ ந தத: பரமிதி'' என்பதாக உபநிஷத் பாஷ்ய

காரர் அருளிச்செய்துள்ளார். இங்கு ஸ்ரீ தேசிகன் இசைந்துள்ள, ஸாமாந்யத: காரயித்ருத்வத்திற்கு ப்ரமாணமாக ச்ருத ப்ரகாசிகா ஸ்ரீ ஸூக்தியை உதாஹரித்திருப்பதனால் ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸாமாந்யத: காரயித்ருத்வமானது இவ்வாசார்யர் இருவருக்குமே ஸம்ப்ரதிபந்நம் என்பது ஸுஸ்பஷ்டமாகின்றது. ஆக இதனால் ஸ்ரீ தேசிகனைப்போலவே சுருதப்ரகாசிகாசார்யரும் ப்ரதம ப்ரவ்ருத்தியுள்பட காரயித்ருத்வத்தை எம்பெருமானுக்கு இசைகிறார்; அந்தக் காரயித்ருத்வமானது ஸாமாந்ய ரூபமென்றும் விசேஷ ரூபமென்றும் இரண்டுவிதம். அதில் விசேஷத: காரயித்ருத்வத்தை ப்ரயோஜகத்வம் என்றும் ஸாமாந்யத: காரயித்ருவத்தை உபேக்ஷகத்வம் என்றும் உதாஸீநத்வம் என்றும் வழங்குகிறது. எள்ளிவ்வாறாக இரண்டு நிலைகளுக்கும் பரஸ்பரம் உள்ள வித்யாஸம் என்பதாக ச்ருதப்ரகாசிகாசாரியரின் திருவுள்ளமாகிறது. ஆகவே இவ்வாசார்யர்களுக்குக் காரயித்ருத்வ விஷயத்தில் பரஸ்பரம் அபிப்ராயபேத மிருப்பதாகக் கொள்வதற்கில்லை.

மேலும் நமது பத்ராதிபர் ஸ்வாமி மற்றொருவிதமாயும் இவ்வாசார்யர்களுக்கு அபிப்ராய பேத மிருப்பதாக எழுதியிருக்கிறார். அதாவது — "உபேக்ஷகத்வம் ஒரு தசையிலும் மற்றொரு தசையில் அநுமந்த்ருத்வமும் என்று இரண்டு தசா பேதங்களை ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் பற்றுவதாகத் தெரியவில்லை. ச்ருத ப்ரகாசிகாசார்யரோவெனில் சுருதிகளில் பரமாத்மாவுக்கு ஸாக்ஷித்வம் சொல்லியிருப்பதைக் கொண்டு முதல் ப்ரவ்ருத்தியில் உபேக்ஷகத்வம் என்றும் மேற்கொண்ட ப்ரவ்ருத்திகளில் அநுமந்த்ருத்வம் என்றும் வ்யவஸ்த்தையை இசைந்திருக்கிறார். ஸாக்ஷித்வமும் (அதாவது உபேக்ஷகத்வம்) அநுமந்த்ருத்வமும் எல்லா தசையிலும் பகவானுக்கு உண்டு என்பதே ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம்" என்பதாக.

ஸாக்ஷித்வத்தைக் காட்டில் உபேக்ஷகத்வமானது வேறுபட்ட நிலை. ஸாக்ஷித்வமானது உபேக்ஷகத்வ ரூபமன்று. ஸாக்ஷித்வமாவது எல்லா நிலைகளிலும் எல்லாவற்றையும் ஸாக்ஷாத்காரம் செய்கை. உபேஷகத்வமாவது — விஷய ஸ்ருஷ்ட்யாதிகளில் விசேஷ காரணமன்றிக்கே ஸாதாரண காரணமாகை. "ஸாக்ஷிதாத்ருஶஸஹஸ்ய" என்கிற ஸாராவளி ச்லோகத்திலுள்ள வாச்யத்திற்கு சிந்தாமணி முதலிய வ்யாக்யாநங்களிலும் ரஹஸ்யத்ரய சுளகமென்கிற (ஸ்ரீ குமார வரதாசார்யர் க்ரந்தம்) ஸ்ரீ ஸூக்தியிலும் இவற்றிற்கு பேதம் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே "ஸாக்ஷித்வாத்ருஶ நேதஸ்ஸதிமதிஷு ப்ரேரகத்வம் நயந்தோ" என்கிற ஸாராவளி ஸ்ரீ ஸூக்தியில் ப்ரேரகத்வமும் ஸாக்ஷித்வம் முதலியதும் துல்ய ப்ரமாண ப்ரதிபந்நம் என்று சொல்லியிருக்கிறதேயன்றி உதாஸீநத்வாநுமந்த்ருத்வங்களுக்கு ஏகதசையில் ஸமவாயத்தைச் சொல்லியதாகக் கொள்வதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. "ஸகலாநாமேவம் ப்ரவ்ருத்தாநாம் ஜீவாநாம் ஸ்வதந்த்ரம் | ப்ரவர்த்தகத்வாத் அநுமந்த்ருத்வம்" என்னும் ரஹஸ்யத்ரய சுளகத்திலும் "ப்ரவ்ருத்தப்ரவர்த்தநம் ப்ரவர்த்தகத்வாச்ச அநுமந்தா" என்பதாக "ஸாக்ஷிதாத்ருஶஸஹஸ்ய" என்கிற வாக்யத்தின் சிந்தாமணி முதலிய வ்யாக்யாநங்களிலும் அருளிச் செய்திருக்கிறபடியே ப்ரவ்ருத்த ப்ரவர்த்தநமே அநுமந்த்ருத்வம் ஆகையால் உபேக்ஷகத்வத்தோடு ப்ரதம க்ஷணத்திலேயே ஸமவாயம் என லொண்ணாது. அப்போது இசைந்திருக்கையாலே அநுமந்தா என்கிற சாம ச்லோகாதிகார ஸ்ரீ ஸூக்தியில் அப்போது என்கிற சப்தமானது அந்தக்ஷணத்தில் என்கிற அர்த்தத்தில் பிரயோகம் செய்யப்பெற்றதன்று; கண்டகால பரம் அது. ஆகவே இவ்விஷயத்திலும் ஆசார்யர்களுக்கு அபிப்ராய பேத மிருப்பதற்கு ஆதாரமொன்றும் ஏற்படவில்லை.

"கர்த்ரா தேவ: ஸதாநாம் ந தத் காரணஸ்யாத: ப்ரேரகஸ்த்வ யஸ்து" என்கிற ச்லோகத்தினால் ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் ஸாமாந்யத: ப்ரேரகத்வத்தையும் இசையாத சிலரை நிரஸநம் செய்கிறாரேயன்றி ச்ருத

ப்ரகாசிகாசார்யரை நிரஸிக்கவில்லை. ஸாமாந்யத: காரயித்ருவத்தை அவரும் இசைவதால் அவரை நிரஸிப்பதாகக் கொள்ளவும் முடியாது.

காரயித்ருத்வ விஷயத்தில் ச்ருத ப்ரகாசிகாசார்யர் ப்ரப்ருதிகளுடைய பக்ஷத்திற்கும் ஸ்ரீ தேசிகன் பக்ஷத்திற்கும் பேத மிருப்பதாக பூர்வாசார்யர்கள் ஒருவரும் சொல்லவில்லை. நிற்க “ஸவ_ழ்ஷா ஸவ_ழ்வெ_ரகஸ்_ாவி .ர.ஸ்ரஸ் உவெக்ஷககா நாஹேஜ்ரகாஷிவவ_நா_நாம் தக்ஷாவாய_ழ்ம_ரைஷ ஷ்ரஷ்டா_நாம் கவிரோயெவிரோயவத்_ரதிஹாஸரா_நா_நாம் ஸ்யவேவா விரோயொ வாஜிஷ்ஜீவெ_ழாஜவ்ய: ” என்பதாக சரம சுலோகாதிகார விவரணியில் சொல்லியிருக்கிற ரீதியிலே ஆபாதத: விரோதம் இருப்பதுபோல் தோன்றுகிறதேயன்றி வஸ்து வ்ருத்தியில் விரோதம் கிடையாது. “ஹாஷ்_ாஷி ம_ரஙமெரொ வ்யவஹித_நவஸா வெஷயெ_யம் ஹஜெ_த” என்றார் ஸாராவளியில் ஆசார்யனும் ஸ்ரீபாஷ்யம் தத்வஸாரம் சுருத ப்ரகாசிகை முதலிய க்ரந்தலெசமும் “ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் ப்ரேரகத்வம் உண்டு” என்று தாம் நிஷ்கர்ஷித்த அர்த்தத்தையே போதிக்கின்றது. இது நிரூபகருக்குப் புலப்படும் என்று தாத்பர்யம்.

மேலும் “க_த_ழா_நஹ்_ந்_தஜ_ர:” என்கிறது பராயத்தாதிகரண முதல் சுலோகம். இதில் உத்தரார்த்தத்தில் “வெவம் கஷ_ழாக்ஷகாமெ” த்யாதியால் அதிகரண பூர்வபக்ஷியை நிரஸநம் செய்கிறார். நிரீச்வர மீமாம்ஸகர் அதிகரண பூர்வபக்ஷிகள் என்பது இவ்வதிகரணத்தில் அத்வைத வ்யாக்யாநங்களில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது. “ஸ்ருதெஷுஶரொதெ ஸ்ரு_திஶதவிஷிதெ வெஷ உஸ்ஜந்_ரஜ:” என்று ஆசார்ய ஸூக்திசைலியையும் இதன் வ்யாக்யாநத்தில் “ஹவஷீ ரீஸ்ரவ_திக்ஷெவவ_யாவஸ: ஸ்ரு_திவ்_ரணஜ்வ்_ெவஷ நிவந்ய:ந:” இத்யாதி வாக்ய சைலியையும் பார்க்குமிடத்தில் ஸர்வாத்மநா இந்த தூஷணமானது ச்ருத ப்ரகாசிகாசார்ய ப்ரப்ருதிகளைப் பற்றியதன்று என்று வெளிப்படையாகின்றது. “க_த்ர_ழகவம் வஸ்_ாகஷ கஷாவிகஷ” என்கிற சுலோகத்திலேயே “ப்ரதம ப்ரவ்ருத்தியில் ப்ரேரகத்வம் இல்லை” என்கிற பக்ஷத்தை நிரஸிப்பதாக வ்யாக்யாநங்களும் ஏக ரூபங்களாய் காணப்படுகின்றன, ஆகையால் “வெவம் கஷ_ழாக்ஷ” இத்யாதியால் ச்ருத ப்ரகாசிகார்யர் பக்ஷத்தில் தூஷணம் சொல்லியிருப்பதாக நம் பத்திராதிபர் ஸ்வாமி எழுதியிருப்பதற்கு ஔசித்யமில்லை.

[தொடரும்.]

[ப்ரஸ்துத விஷயத்தில், நமது ஆசார்யர்களுக்குள் அபிப்ராயபேதம் இருக்கின்றது என்று அடியேன் மாத்ரம் ஶங்கிக்கவில்லை. சில பெரியோர்களும் இம்மாதிரி ஶங்கித்திருக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது. ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதருடைய நயமயூகமாலிகையில்

“கஜய_ழாஷிஸ்ரு_தெதஸித்ஷநுவெயய்_ழஶம்கயா ।
ஸம்கொவஷஷிவிரெ கெஷிந்_ஷகஷ_வெஷிகஷ_ழவஸ ॥
ஜஹ்ஷாஷ்யீநதா வஷ்_ாதீஸ்ராயீநதாஜவி ந: ।
தாவதா ஶாஸ்த்ரெயெய்_ழணெத்_ஸம்கொவநம் வரெ ॥”

“ஜதஐயவஸ்_ாவ்_வவாஷநவ்_வம்வஷ்ஸக்ஷ_ரஜேஷ ஷ்_ரஷ்டவ்ய:”

என்னும் வாக்யங்கள் காணப்படுகின்றன. —ஸம்பாதகன்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோ(அ)நந்த: ப்ரவிஸ்ய ஜ்ஜ வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஸ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகியசிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்.

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ருதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்க சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் நிகழும் ஆடிமாஸம் 12உ திங்கள் கிழமை திநம் தென் ஆர்க்காடு ஜில்லா பெரும்பாக்கம் அக்ரஹாரத்தில் உபக்ரமித்து மிக்கச் சிறப்புடன் நடந்து வருகின்றது என்பது நமது ஸஹ்ருத்துக்களெல்லாருக்கும் விதிதசரம். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தால் உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகிவரும் யோகக்ஷேமத்தை உடைய பக்தாக்ரகண்யர்களெல்லாரும் அந்த மஹோத்ஸவத்தை ஸேவித்து க்ருதார்த்தர்களாகி மஹத்தான ஆநந்தத்தை அநுபவித்து வருகிறார்கள். பெரும்பாக்கம் என்னும் க்ராமம் பெரும் பாக்யத்தைப் பெற்று நித்யஸூரிகள் வஸிக்கும் நித்ய விபூதி போலவே சோபிக்கின்றது.

'ஸாமஸ்த்ய சித்ரகூடோ(அ)ஸௌ கிரிராஜோபமோ கிரி: ।
யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த: குபேர இவ நந்தநே ॥'

[ஸ்வபாவத்தாலே அதி ரமணீயமாயிருக்கும் இந்தச் சித்ரகூட பர்வதம், இப்பொழுது, அயோத்யாதிபதியான ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய வாஸத்தால் ப்ரதேஶாந்தரங்களைக் காட்டிலும் அதி ரமணீயமாக ஶோபிக்கின்றது] என்று சொல்வது போல, ஸ்தல ஜல அமைப்பினால் இயற்கையாகவே அழகாயிருக்கும் பெரும்பாக்கமானது ஸ்ரீ அழகியசிங்கரால் அதிஷ்டிதமாய்க் கொண்டு இப்பொழுது பக்தர்களெல்லாருக்கும் உத்தேஶ்யதமமாக விளங்குகின்றது. வஸ்துக்களின் உண்மையான பெருமை பகவத் பாகவத ஸம்பந்த விஶேஷாதீநமன்றோ?

ஸ்ரீ அழகியசிங்கர், சென்றவருஷம் தை மாஸத்தில் ஸஞ்சாரத்தை உபக்ரமித்தார். சோளதேஶத்திலுள்ள திவ்ய

தேசங்க ளெல்லாவற்றுக்கும் எழுந்தருளி ஆங்காங்கு உள்ள பக்த சிரோமணிக ளெல்லாரையும் க்ருதார்த்தர்களாக்கி இப் பொழுது உத்தர தேசாபிமுகமாக எழுந்தருளுகிறார்.

> ‘உஹறிவஜநஂ நூணாஂ ஜ்ரஹிணாஂ ஈநவெதஸாழ |
> நிஶ்ரேயஸாய ஹவதி நாநுவாா கஆூதெ கூிவிக ‖’

[பகவத்ப்ரியர்கள் தேஶாத்தேஶம் ஸஞ்சரித்தால், அது தீநர் களாயிருக்கும் ஸம்ஸாரிகளுடைய க்ஷேமத்தின் பொருட்டே யன்றோ? வேறு எப்படி அது ஸம்பவிக்கும்?] என்கிறபடி ஸ்ரீ அழகியசிங்கருடைய திவ்ய ஸஞ்சாரம் நம் எல்லாரையும் அநுக்ர ஹிக்கும் பொருட்டே. “ந நஶெயழ” என்று நாம் ஓடப் பார்த்தா லும், “ஜெதவ்யூழ” என்று புருஷோத்தமன் நம்மை ரக்ஷிப்பதை வ்ரதமாகக் கொண்டு, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ரூபமாக இவ்வாறு ஸஞ்சரிக்கிறானன்றோ? அவனுடைய ஸம்பந்த விசேஷத்தைப் பெற்றிருக்குமவர்களும் அம்மாதிரி ஶீலமுள்ளவர்களே?

* * * *

கோரமான யுத்தம்

காமம் என்பது ‘மஹாஶந’ மென்றும் ‘மஹா பாப்மா’ வென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அது க்ரூரமான பரஹிம் ஸாதிகளில் ஜநங்களை ப்ரவர்த்திப்பிக்கும் ஸ்வபாவமுள்ள தாதலால் ‘மஹாபாப்மா’ வென்னும் பெயர் அதற்குத் தகுமென்று பெரியோர்கள் சொல்லலாம். ஆனால் உக்ர மான பரஹிம்ஸைக்கு மாத்ரம் அது காரணமன்று; அதி தீவ்ர மான ஆத்மஹிம்ஸைக்கும் அது காரணமாகின்றது. “ஓொகஃ ஜூயஂ ஶ்ரேயவி நஷ்டஊஷ்டிஃ” [காமத்தால் ஆக்ரமிக்கப்பட்டவர்கள் தம்மு டைய நன்மையையும் அறியார்] என்றும் “கநஞுஃவஂ ந வவெஷ உஒஜஃ” [தமக்கு நேரும் அளவற்ற துக்கத்தையும் காமத்தால் அவர் கள் அறியார்களில்லை. இப்படியும் ஒரு மௌட்யமுண்டோ?] என்று ஶாக ப்ரஹ்மம் அநுக்ரஹித்திருக்கின்றது. இது இக்காலத்திற்கு மிக்கப் பொருத்தமுள்ளதாக இருக்கிறது. சில வர்ஷங்களாக தேஶாந்தரங்களிலுள்ள ஜநங்கள் பரஸ்பரம் பத்த வைரர்களாய் அதி கோரமான யுத்தத்தைச் செய்து வருகிறார்கள். எவ்வளவு ஜநங்கள் நாஶமடைந்து விட்டார்கள்? எவ்வளவு த்ரவ்யம் வீணாகி விட்டது! தம்முடைய ஶ்ரேயஸ்ஸில் நஷ்டத்ருஷ்டிகளாக இரா விட்டால் இம்மாதிரி ஒருவர் ஒருவரைக் கொன்று மடிவார்களோ?

தைவாநுக்ரஹத்தாலோ, ஜந்மாந்த்ர ஸுக்ருதத்தாலோ, ஸாதுக்களின் மஹிமையாலோ, இது பர்யந்தம் நமது தேசத்திற்கு யுத்தம் வராமல் நின்றிருக்கிறது. இரண்டு மூன்று மாஸங்களுக்கு முன், ஶத்ருக்கள் நமது தேசத்திலும் ப்ரவேசித்து யுத்தத்தை ஆரம்பித்து விடுவார்களோ வென்று பயந்தோம். இன்னும் அந்தப் பயம் நிவ்ருத்தமாகவில்லை. ஆனால் ஶத்ருக்களுடைய

த்ருஷ்டி வேறு இடங்களில் நோக்கி இருக்கிறபடியால் இவ்விடத்தில் அவர்களுடைய சேஷ்டை இப்பொழுது அதிகமாகத் தெரியவில்லை. ஆனல் எந்த க்ஷணத்தில் என்ன ஸம்பவிக்குமோ ஒருவராலும் சொல்லக்கூடாமல் இருக்கின்றது.

இந்தத் துர்தசை இப்போழுது வருவானேன்? என்று ஒரு கேள்வி ஏற்படலாம். பகவானுற் செய்யப்பட்டு வரும் ஜகத் வ்யாபாரத்தின் கதியை நாம் ஊஹிக்க ஸமர்த்தர்களோ? அதன் ப்ரவாஹம் மிகவும் விசித்ரமன்றோ? ஆனல், இம்மாதிரி ஜகத்திற்கு ஒரு கஷ்டம் வரும்பொழுதெல்லாம் அதற்கு முன்னதாகச் சில ஸம்பவங்கள் ஸம்பவிக்கின்றன. தர்மம் ப்ராயேண லோபத்தை அடைகின்றது; அதர்மம் பொங்கி வளர்கின்றது; ஜநங்கள் மனம்போன போக்கெல்லாம் நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள். க்ஷோபம் வரவொட்டாமல் தடுக்கும் அணை யெல்லாம் ஶிதிலமாகிவிடுகின்றது. த்யூதம் துராக்ரமம் வஞ்சனை த்வேஷம் மதம் பேராசை இவைகளை உடையவர்களாகவே ப்ராயேண ஜனங்களெல்லாரும் மாறிவிடுகிறார்கள். அம்மாதிரி சின்ஹங்கள் இப்பொழுது தென்படுகின்றனவா? என்றால் அதைக் கேட்கவும் வேண்டுமோ? கலிகாலமன்றோ?

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖
[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

சித்ரபாநு௵ ஆவணிமீ

1௳ திங்கள்	—	விஷ்ணுபதி, சூந்யதிதி.
2௳ செவ்வாய்	—	சூந்யதிதி.
7௳ ஞாயிறு	—	த்வாதசிதிதி.
8௳ திங்கள்	—	த்ரயோதசி சதுர்த்தசி திதித்வயம்.
9௳ செவ்வாய்	—	உபாகர்மம்.
10௳ புதன்	—	காயத்ரீஜபம்.
17௳ புதன்	—	ஜந்மாஷ்டமி, ஸ்ரீஜயந்தீ.
18௳ வியாழன்	—	பாஞ்சராத்ரஜயந்தீ நவமிதிதி.
19௳ வெள்ளி	—	அதிதி.
31௳ புதன்	—	ஸிம்ஹசுக்ல ஷஷ்டி ஸப்தமிதிதி.

असुर्या नाम ते लोका अन्धेन तमसाऽऽवृताः ।
तांस्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जनाः ॥ ३ ॥

---

(3) இவ்வாறு இரண்டு மந்த்ரங்களால், சேதநராகிற ஜீவன்கள் அசேதந வஸ்துக்கள் ஈஶ்வரன் ஆக இம்மூன்று தத்வங்களின் ஸ்வரூபத்தையும் ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமாகக் கர்மாநுஷ்டாநத்தை எவ்விதம் செய்யவேண்டியது என்பதையும் உபதேசித்துவிட்டு, இந்த மூன்றுவது மந்த்ரத்தால், எவர்கள் இந்த ஜ்ஞாநத்தைப் பெறுமலும் பகவதாராதநத்திற்காக வின்றிக்கே தங்களுடைய ப்ரயோஜநத்தையே உத்தேசித்துக் கர்மங்களைச் செய்து த்ரவ்யத்தை ஸம்பாதித்து வருகிறார்களோ, அவர்களுக்கு ஶ்ரேயஸ் துர்லபமென்றும் ஸம்ஸார துக்கத்திலேயே அவர்கள் மூழ்கி யிருப்பார்களென்றும் சொல்லுகிறார். தத்வ ஜ்ஞாநமிராமல் காம க்ரோதம் முதலியவைகளுக்குப் பரவஶர்களாய் ஜீவித்து வரும் ஜநங்களை ஆத்ம ஹத்தி பண்ணிக்கொள்ளுகிறவர்களாகவே இந்த மந்த்ரம் பேசுகின்றது. "**असन्नेव स भवति - असद् ब्रह्मेति वेद चेत्**" [எவனுக்கு ப்ரஹ்மத்தைப் பற்றிய ஜ்ஞாநம் இல்லையோ, அவனை இல்லையென்றே சொல்லவேண்டும்] என்று ஶ்ருதி சொல்லுகின்றது.

[ப-ரை.] **ये के च** - எவர்கள், **आत्महनः** - தங்களைக் கொன்று கொண்டே, **जनाः** - பிறவியைப் பெறுகிறார்களோ [அதாவது: ஸம்ஸாரக் கட்டில் அகப்பட்டிருக்கிறார்களோ; தற்கொலை செய்துகொள்பவர்களுக்கு ஸமமாக காம க்ரோதம் முதலியவைகளுக்குப் பரவஶமாகி அஜ்ஞாநிகளாகவே இருக்கிறார்களோ], **ते** - அவர்கள், **प्रेत्य** - தேஹத்தை விட்டுப் பிரிந்த பிறகு, **तान्** - அந்த லோகங்களை, **अभिगच्छन्ति** - பூர்ணமாக அடைகிறார்கள். [எந்த லோகங்களை யென்றால்] **अन्धेन तमसा** - பெரிய இருளால், **आवृताः** - மூடப்பட்டிருக்கிற, **असुर्या नाम**-அஸுர்யங்களென்று ப்ரஸித்தங்களான, **ते लोकाः** - அப்படிப்பட்ட லோகங்கள் எவையோ [அவைகளை].

असुर्याः - இந்தப் பதம் 'அஸுர' என்னும் சப்தத்திலிருந்து உண்டானது. **असुराणां स्वभूताः** - [அஸுரர்களுடைய ஸொத்து என்று சொல்லக்கூடிய]; 'அவ்வளவு பயங்கரங்களான' என்பது குறிப்பு. இந்த '**असुर्याः**' என்னும் பதத்தை 'ஸூர்யன் இராத' என்று அர்த்தம் சொல்லலாமோ வென்று சிலர் ப்ரமிக்கக்கூடும். அதற்கு ஆதாரமில்லை.

ये के च - இதற்கு, 'அவர்கள் எவர்களாக இருந்தாலும்' என்பது அர்த்தம். தேவதைகளோ மநுஷ்யர்களோ அல்லது மநுஷ்யர்களுக்குள் ப்ராஹ்மணர்களோ வேறு வர்ணத்தைச் சேர்ந்தவர்களோ, அவர்கள் எவர்களாக இருந்தாலும் ஆத்ம ஸ்வருப ஜ்ஞாந மற்றிருந்தால், நிஶ்சயம் ஸம்ஸாரத்திற்கே அர்ஹர்கள் என்பது இந்தப் பதத்தின் தாத்பர்யம்.

अनेजदेकं मनसो जवीयो
नैनद्देवा आप्नुवन् पूर्वमर्षत् ।
तद्धावतोऽन्यानत्येति तिष्ठत्
तस्मिन्नपो मातरिश्वा दधाति ॥ ४ ॥

आत्महनः - 'இந்த மந்த்ரம் ஆத்மஹத்தி செய்துகொள்பவர்களையே நிந்திப்பதாகத் தெரிகின்றது. அப்படியிருக்க, தத்வ ஜ்ஞாநம் பெறுதவர்களைப்பற்றி இதுபேசுகின்றது என்று எப்படிச்சொல்லக்கூடும்?' என்று ஒரு ஶங்கை தோன்றும். ஆத்ம ஹத்தி செய்துகொள்பவர்களைப் பற்றி இவ்விடத்தில் பேசுவது ஸங்கதமாகமாட்டாதாகையால், முன் பின் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைப் பார்த்து இம்மாதிரி அர்த்தம் கொள்ளவேண்டியது அவஶ்யமாகின்றது. நிற்க: ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் ஸமாந ப்ரகரணத்தில் இந்த மந்த்ரத்தை ஜ்ஞாபிக்கக் கூடிய பத ப்ரயோகங்களுடன் ஒரு வாக்யம் காணப்படுகின்றது. அதில் '**आत्महनः**' என்னும் பதத்தின் ஸ்தாநத்தில் '**अविद्वांसोऽबुधाः**' என்னும் பதங்கள் காணப்படுகின்றன.

"अनन्दा नाम ते लोका अन्धेन तमसाऽऽवृताः ।
तांस्ते प्रेत्याभिगच्छन्ति अविद्वांसोऽबुधा जनाः ॥"

என்பதே அந்த வாக்யம். இந்த ஸ்தாந பலத்தை ஆதாரமாகக்கொண்டு, '**आत्महनः**' என்னும் பதத்திற்கு '**अविद्वांसः अबुधाः**' [ஜ்ஞாந மிராதவர்கள்] என்பதே தாத்பர்யம் என்று சொல்வதே யுக்தமாகும். சரியான ஜ்ஞாநத்தைப் பெறுவதற்கு ப்ரயத்நப்படாமல் கேவலம் விஷய ஸுகங்களையே தேடிப்போகும் ஜநங்களை இந்த உபநிஷத் மிகவும் கடுவாகவே நிந்திக்கின்றது. அவ்வளவு காடவம் அவர்களுக்குத் தகாதோ? இது கேவலம் நிந்தை மாத்ரமன்று; உபநிஷத் வாக்யமானதால் இதிற் சொல்லப்பட்டிருப்பது வஸ்து ஸ்திதி யென்றே நாம் அறிதல் வேண்டும்.

जनाः—இதற்கு '**जनिमन्तः**' [பிறப்பை அடைகிறவர்கள்; அதாவது: ஸம்ஸாரத்தில் அகப்பட்டிருப்பவர்கள்] என்பது பொருள்.

ப்ரஹ்ம ஜ்ஞாந மிராதவர்களுக்கு இப்படிப்பட்ட அநர்த்தம் உண்டு என்று சொன்னதன் கருத்து, ஶிஷ்யனுக்கு ப்ரஹ்ம வித்யையில் ஶீக்ரம் ப்ரவ்ருத்தி உண்டாக்குவதற்காகவே. அநர்த்தம் ஸம்பவிக்குமென்பதை அறிந்துகொண்டால், அந்த அநர்த்தம் வராமல் தம்மை ஸம்ரக்ஷித்துக்கொள்ள எல்லாரும் ப்ரவர்த்திப்பார்களன்றோ?

---

4. பரப்ரஹ்மம் எவ்விடத்திலும் வ்யாபித்திருப்பதாகக் கீழ் மந்த்ரங்களாற் சொல்லப்பட்டது. அந்தப் பரப்ரஹ்மம், மிகவும் விசித்ர

மான ஶக்தியுடன் கூடியது என்னும் விஷயம் இந்த மந்த்ரத்தாற் சொல்லப்படுகிறது. பரப்ரஹ்மம், மற்றை வஸ்துக்களெல்லாவற்றையுங் காட்டிலும் பல ப்ரகாரங்களில் அத்யந்தம் விலக்ஷணம். 'எந்தக் கார்யம் மற்றவர்களால் ஸாதிக்க முடியாததோ, அதையும் விளையாட்டாகவே ஸாதிக்கும் திறமையுள்ளது பரப்ரஹ்மம்' என்னும் விசித்ர ஶக்தி யோக மாகிற வைலக்ஷண்யம் இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது. எது அசையமாட்டாதோ அதற்கு வேகமும், எது ஏற்கெனவே அடையப் பட்டதோ அது அடையப்படாம லிருப்பதும், நின்றுகொண்டிருக்கும் வஸ்து ஓடுகிறவர்களைத் தாண்டிப்போவதும், கேவலம் காற்றாக இருக்கும் பொருள் கடினமான மற்ற வஸ்துக்களைத் தரிப்பதும் இவையெல்லாம் சேராச் சேர்த்தி யல்லவோ? இவ்வளவும் இன்னும் இவைபோன்ற மற்றை ஆஶ்சர்யங்களும் பரப்ரஹ்மத்தினிடத்தில் சேர்ந்திருக்கின்றன. அவை எப்படி சேர்ந்திருக்கின்றன வென்பது மேல் உபபாதிக்கப்படும்.

[ப - ரை] **एकम्** - ஒரு வஸ்து, **अनेजत्** - அசைவின்றி இருந்து கொண்டே, **मनसो जवीयः** - மநஸ்ஸைக் காட்டிலும் அதிக வேகத்தை உடைத்தா யிருக்கின்றது. **पूर्वमर्षत्** - ஏற்கெனவே எல்லாருக்கும் ப்ராப்தமா யிருக்கிற, **एनत्** - இதை, **देवाः**—தேவதைகள்கூட, **नाप्नुवन्** - இன்னமும் அடையாமலே இருக்கிறார்கள். **तत्** - அந்த வஸ்து, **तिष्ठत्** - நின்றுகொண்டே, **धावतः** - ஓடும், **अन्यान्** - மற்றவர்களை, **अत्येति** - தாண்டுகின்றது. **तस्मिन्** - அந்த வஸ்துவினிடத்தில் இருக்கும், **मातरिश्वा** - காற்றானது, **अपः** - ஜலத்தை [ஜலம் முதலான பொருள்களை], **दधाति** - தரிக்கின்றது.

एकम् - இந்தப் பதம், அந்த ப்ரஹ்மத்தின் ப்ரதாநத் தன்மை யைக் குறிக்கின்றது. ப்ரஹ்மத்திற்கு ஸமமாக வேறொன்று மில்லை; அதற்கு அதிகமானது மில்லை. ஆகையால் அது மிகப் பெரியது.

अनेजत् - ப்ரஹ்மம் எவ்விடத்திலும் இருக்கும் வஸ்துவானதால், உண்மையாகவே அதற்கு ஓரிடம் விட்டு மற்றோரிடம் போவது என்பது இல்லை. ஆகையால் 'அசையாதது' என்னும் வ்யவஹாரம் அதற்கு ஒத்ததே. அவ்விதம் அசையாததாக இருக்கையிலும், அது மநஸ் ஸைக் காட்டிலும் அதிக வேகமுடையது. மநஸ், இந்த ப்ரக்ருதி மண்ட லத்திற்கும் வெளிப்பட்ட ப்ரதேஶத்திற்குக்கூட க்ஷண மாத்ரத்திற்குள் போகின்றதென்றால், அதற்கு முன்னதாகவே ப்ரஹ்மம், அது எவ்விடத் திலு மிருக்கும் வஸ்து வாதலால் அந்த இடத்தில் இருக்கின்றதன்றோ? ஆகையால் அது மநஸ்ஸைக் காட்டிலும் அதிக வேகமுடையது என்று சொல்லக்கூடும்.

पूर्वमर्षत् - கீழ்ச் சொல்லி யிருக்கிறபடி ப்ரஹ்மம் இராத இடம் இல்லையாதலால், சதுர்முக ப்ரஹ்மா முதல் க்ஷுத்ர ஜந்துக்களுட்பட ஸகல ஜந்துக்களையும் அது அடைந்தே இருக்கின்றது. அப்படி அது

तदेजति तदु नैजति तद्दूरे तद्वदन्तिके ।
तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः ॥५॥

இருந்தபோதிலும், பூமிக்குள் இருக்கும் புதையலை, அதன் ஸமீபத்தில் அதன்மீதே ஸஞ்சரிக்குமவர்கள்கூட, அதன் ஜ்ஞானமற்றிருக்கும் பக்ஷத்தில் எப்படி அதை அடையாதவர்களாகவே இருக்கிறார்களோ, அப்படியே ப்ரஹ்ம வித்யையின் உபதேசத்தைப் பெறாமலிருக்கிற நாம் ப்ரஹ்மத்தை அடையாதவர்களாகவே இருக்கிறோம்.

तिष्ठत् - கீழில் 'அசையாததாக இருக்கையிலும் வேகமுடையது' என்னும் விரோதம் பரிஹாரம் செய்யப்பட்டது போலவே, இவ்விடத்தில் தோன்றும் விரோதத்திற்கும் பரிஹாரம் சொல்லப்படுகின்றது. ப்ரஹ்மம் விபுவானதால், அதிவேகத்துடன் ஓடுகிறவர்களையும் தாண்டி அவர்களுக்கு முன்னாகவே நிற்குமன்றோ?

मातरिश्वा - லோகத்தில் கடினமாயிருக்கிற வஸ்துக்களே மற்றை வஸ்துக்களுக்கு ஆதாரமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். காற்றைக் கல் தரிக்கும்; கல்லைக் காற்று தரிக்குமோ? பகவான் தனது ஸங்கல்பத்தால் வாயுவுக்கு ஆதாரமாக இருந்துகொண்டு, அந்த வாயுவை மற்றை ஸகல பதார்த்தங்களையும் தரிக்கும்படி செய்கிறார். ஸூர்யன், சந்த்ரன், நக்ஷத்ரங்கள், பூமி, ஸமுத்ரம் இவை யெல்லாவற்றையும், வாயுவானது பகவானால் கொடுக்கப்பட்ட ஶக்தியைக் கொண்டு, தரிக்கின்றது என்று,

"द्यौस्सचन्द्रार्कनक्षत्रं खं दिशो भूर्महोदधिः ।
वासुदेवस्य वीर्येण विधृतानि महात्मनः ॥"

என்பது முதலான ஶாஸ்த்ர வாக்யங்கள் சொல்லுகின்றன.

---

5. கீழ் மந்த்ரத்தில் சொல்லப்பட்ட விஷயமே மறுபடியும் சொல்லப்படுகின்றது. பகவான் விசித்ரமான ஶக்தியுடன் கூடியவன் என்னும் விஷயம் எல்லாருக்கும் ஸுலபமாக க்ரஹிக்கக்கூடியதன்று என்று எண்ணி, ஆகராதிஶயத்தால் அதையே திரும்பவும் உபதேசிக்கிறார். உபதேஶம் செய்யப்படும் விஷயங்கள் கொஞ்சம் துரவகாஹங்களாக இருந்தால், அவைகளை ஆசார்யன் முகாந்தரங்களால் திரும்பத் திரும்ப சிஷ்யனுக்கு நன்றாக அவகாஹமாகும் வரை உபதேசித்தல் வேண்டுமன்றோ?

[ப-ரை] तत्-அந்தப் பரப்ரஹ்மம். एजति-சலிக்கிறது [போலவே இருக்கின்றது]. ஆனால், तत् - அதுவே, नैजति - [உண்மையில்] சலிக்கிறதே இல்லை. तत् - அது, दूरे - தூரத்தில் இருக்கிறது; तद्वत्- அதுவே, अन्तिके - ஸமீபத்திலும் இருக்கிறது. तत् - அது, अस्य सर्वस्य-

यस्तु सर्वाणि भूतानि आत्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥ ६ ॥

இந்த எல்லா வஸ்துக்களுடையவும், **अन्तः** - உள்ளில் இருக்கிறது; **तदु** - அதுவே, **अस्य सर्वस्य** - இந்த எல்லா வஸ்துக்களுடையவும், **बाह्यतः** - வெளியிலும் இருக்கின்றது.

नैजति एजति - என்பதில் காணப்படும் விரோதத்திற்குக் கீழ் மந்த்ரத்தில் விளக்கியிருக்கிறபடியே பரிஹாரம். ப்ரஹ்மம், ஜ்ஞாந மற்றவனுக்குத் தூரத்திலும் ஜ்ஞாநத்தைப் பெற்றிருப்பவனுக்கு ஸமீபத்திலும் இருக்கிறபடியால், இரண்டாவது விரோதமும் பரிஹ்ருதம். ப்ரஹ்மம்விபுவானதால், எல்லா வஸ்துக்களுக்கும் உள்ளிலும் புறத்திலும் இருக்கிறது. ஆகையால் மூன்றாவது விரோதமும் பரிஹரிக்கப்பட்டதாகின்றது. அணுவாயிருக்கும் வஸ்துக்களுள் அந்தர் வ்யாப்தியும், விபுவாயிருக்கும் வஸ்துக்கள் விஷயத்தில் பஹிர் வ்யாப்தியும் ஸம்பவிக்க மாட்டாவானாலும், பகவான் எவ்விடத்திலும் இருக்கிறான் என்பதை நினைத்து, இவ்விடத்தில் 'எல்லா வஸ்துக்களுடைய உள்ளிலும் வெளியிலும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

"**अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः**"

[நாராயணன் எல்லா வஸ்துக்களின் உள்ளிலும் வெளியிலும் வ்யாபித்து நிற்கிறான்] என்று வேறு உபநிஷத்துக்களும் சொல்லுகின்றன.

---

6. இவ்விதம், ஜகத் முழுவதையும் வ்யாபித்து, அதன் அந்தராத்மாக பரப்ரஹ்மம் நிற்கின்றது என்று சொல்லிவிட்டு, இனி அப்படி ப்ரஹ்மம் அந்தராத்மாவாக இருப்பதை அநுஸந்தித்து அதை நன்றாக உணர்வதால் கிடைக்கும் ப்ரயோஜநத்தைப் பற்றிப் பேசுகிறார். 'எவ்விடத்திலும் பகவான் இருக்கிறான் என்பதை உணர்ந்தவனுக்கு மற்றவனை இகழ்ந்து பேசுவதற்குப் புத்தி வரமாட்டாது. இதுவே ஒரு பெரிய ப்ரயோஜநம்' என்று இந்த மந்த்ரம் சொல்லுகின்றது. இதனால், பரநிந்தை மஹா தோஷமென்றும் அதை விலக்குவதே முமுக்ஷுவுக்கு முதல் கார்யமென்றும் வ்யக்தமாகின்றது.

[ப-ரை] **यस्तु** - எவன் [எந்தத் ஜ்ஞாநியானவன்], **सर्वाणि भूतानि** - [சதுர்முக ப்ரஹ்மா முதற்கொண்டு ஸ்தாவர பர்யந்தங்களான] ஸகல பூதங்களையும், **आत्मन्येव** - பரமாத்மாவினிடத்திலேயே, **अनुपश्यति** - அநுஸ்யூதமாக [தெளிவாக] த்யாநம் செய்கிறானோ, **आत्मानम्** - பரமாத்மாவை, **सर्वभूतेषु** - ஸகல பூதங்களிலும் [இருப்பதாக த்யாநம் செய்கிறானோ], (**सः** - அவன்), **ततः** - அந்தப் பூதங்களுள் ஒன்றிலும், **न विजुगुप्सते** - எவ்வித நிந்தையையும் செய்யமாட்டான்.

यस्मिन्सर्वाणि भूतानि आत्मैवाभूद्विजानतः ।
तत्र को मोहः कश्शोक एकत्वमनुपश्यतः ॥ ७ ॥

यस्तु - எவனேவென்றால். 'எவன்' என்பதுடன் நிற்காமல் 'எவனேவென்றால்' என்று பேசுவது, இப்படி த்யாநிக்கும் தத்வ ஜ்ஞாநியின் பெருமையைக் காண்பிக்கும் பொருட்டே.

आत्मनि - இவ்விடத்தில் 'ஆத்மா' என்று பொதுவாக ப்ரயோகம் செய்யப்பட்டிருந்தபோதிலும், அர்த்த ஸ்வபாவத்தாலும் ப்ரகரணத்தாலும் பரமாத்மாவையே அந்தப் பதம் குறிக்கின்றதென்பது வ்யக்தம். **'एव'** ஸ்தூலமாகப் பார்க்கும் காலத்தில், பதார்த்தங்களெல்லாம் மூர்த்தமாகத் தென்படும் பூமி முதலானவைகளால் தரிக்கப்படுகின்றன வென்றே தோன்றும். ஆனால் ஸூக்ஷ்மமாகப் பார்த்தால், பூமி முதலியவை வழியாகப் பகவானே எல்லாவற்றையும் தரிக்கிறானென்பது விளங்கும். இந்த அர்த்தத்தையே இவ்விடத்தில் இருக்கும் **'एव'** என்னும் பதம் ஸூசிப்பிக்கின்றது.

अनुपश्यति - **'अनु'** என்பது அநுஸ்யூதமாக (அதாவது தெளிவாக) என்னும் அர்த்தத்தைக் குறிக்கின்றது.

पश्यति - த்யாநிக்கிறானே. இதைக் கண்ணால் காணக்கூடியதன்றுதலால், 'பார்க்கிறானே' என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. ப்ரஹ்ம வித்துக்களுடைய பார்வையானது த்யாநமே. ப்ரஹ்ம வித்துக்களே இந்தப் ப்ரகரணத்தில் ப்ரஸ்தாவிக்கப்படுகிறபடியால், 'பார்க்கிறானே' என்று சொல்வதற்குப் 'நிதித்யாஸநம் செய்கிறானே' என்று அர்த்தம் கொள்வதே உசிதம்.

सर्वभूतेषु चात्मानम् - பூதங்கள் பரமாத்மாவால் தரிக்கப்படுகின்றன வென்று சொல்வது உபபந்நமே யாயினும், பரமாத்மா பூதங்களால் தரிக்கப்படுகிறான் என்று சொல்வது உபபந்நமாகுமோ? என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். அப்படிச் சொல்வது உபபந்நமாகமாட்டாது தான். ஆகையால், 'பரமாத்மாவைப் பூதங்களில் பார்க்கிறான்' என்பதற்கு 'பரமாத்மா பூதங்களால் தரிக்கப்படுகிறான்' என்று அர்த்தம் கொள்ளாமல், 'அவன் பூதங்களெல்லாவற்றிலும் வ்யாபித்திருக்கிறான்' என்றே அர்த்தம் கொள்ளவேண்டும். இப்படி 'பரமாத்மாவினிடத்தில் பூதங்களையும் பூதங்களிடத்தில் பரமாத்மாவையும் நிதித்யாஸநம் செய்வது' என்பதானது, 'எல்லாம் பரப்ரஹ்மத்தையே ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றது' என்பதையே சொல்லுகின்றது. எது எதைத் தரிக்கின்றதோ, எது எதை வ்யாபித்து நியமநம் செய்து கொண்டிருக்கின்றதோ, அது அதற்கு ஆத்மாவன்றோ?

---

7. கீழ் மந்த்ரத்தில், எல்லா வஸ்துக்களும் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடையவை என்னும் அர்த்தத்தை ஒருவாறாக விவரித்துவிட்டு,

அப்படி அநுஸந்திப்பவன் ஒரு வஸ்துவினிடத்திலும் நிந்தையைச்செய்ய மாட்டான் என்று அந்த அநுஸந்தாநத்திற்கு ஒரு ப்ரயோஜநம் சொல்லப் பட்டது; இந்த மந்த்ரத்தில் அப்படி அநுஸந்திப்பவன் மோஹம் சோக மற்றவனுகிறுன் என்று வேறு ஒரு ப்ரயோஜநம் சொல்லப்படுகிறது.

[ப-ரை.] **यस्मिन्** - எந்த ப்ரணிதாந காலத்தில், **विजानतः** - (கீழ் மந்த்ரங்களில் விவரிக்கப்பட்டுள்ள உபதேசத்தின் ப்ரகாரம் எல்லா வற்றையும்) தெளிவாக அறிகிறவனுக்குவும், **आत्मैव**-பரமாத்மாவே, **सर्वाणि भूतानि** - எல்லா பூதங்களாகவும், **अभूत्** - ஆகிவிட்டதோ, [அதாவது, விவே சித்துப் பார்க்கும் காலத்தில் பரமாத்மாவே ஸர்வத்துடனும் விசிஷ்ட ஞகவே இருக்கிறுன் என்று விளங்கிவிட்டால்], **तत्र** - அப்பொழுது, **एकत्वम्** - (**ईशा वास्यमिदं सर्वम्** என்று விவரிக்கப்பட்டிருக்கும் ஸர்வ விஶிஷ்டமான) ஐக்யத்தை, **अनुपश्यतः** - விசதமாக அநுத்யாநம் செய்யும வனுக்கு, **को मोहः** - (தான் ஸ்வதந்த்ரன் என்னும்] மோஹம் ஸம்ப விக்குமோ? **कश्शोकः** - (எல்லாம் பரமாத்மாவின் விபூதி என்னும் அறிவு அவனுக்குத் தெளிந்து நிற்கிறபடியால், எவ்வித கடுமையான துக்க ஹேதுக்கள் ஸம்பவித்தபோதிலும் அவைகளில்) சோகமும் ஜநிக்குமோ?

இவ்விடத்தில் விவரிக்கப்படும் பொருள் என்னவென்றுல்:— 'ஸர்வத்திற்கும் ப்ரஹ்மமே ஆதாரம்; ஸர்வமும் அந்த ப்ரஹ்மத்தின் நியமநத்திற்கு உட்பட்டது; எல்லாம் அந்த ப்ரஹ்மத்தின் ப்ரயோஜ நத்தின் பொருட்டே இருக்கின்றது: அதாவது எல்லாவற்றுக்கும் அந்த ப்ரஹ்மமே ஆத்மா; எல்லாம் அவனுடைய சரீரம்' என்னும் ஜ்ஞாநம் ஒருவனுக்கு த்ருடமாக ஏற்பட்டுவிட்டால், அவன் தன்னை ஸ்வதந்த்ரன் என்று நினைத்து ப்ரமிக்கமாட்டான்; அத்யந்தம் ப்ரியமான வஸ்து நஷ்டமாகிவிட்டாலும், 'அந்த வஸ்து பரப்ரஹ்மத்தின் விபூதியே தவிர்த்து தனது அன்று' என்னும் ஜ்ஞாநம் இருக்கிறபடியால் அந்த வஸ்துவின் நாசத்தால் அவனுக்கு ஒருவிதமான சோகமும் ஜநிக்க மாட் டாது' என்பதுதான்.

एकत्वम् - இந்தப் பதம், பரப்ரஹ்மத்தைத் தவிர்த்து வேறென் றும் இல்லை என்னும் ஸ்வரூபைக்யத்தைச் சொல்லமாட்டாது. அப்படிச் சொல்வது அநேக ப்ரமாணங்களுக்கு விருத்தம்; இவ்விடத்திற் சொல் லப்பட்டிருக்கும் '**ईशावास्यम्**' (ஸர்வமும் ஈசனுலே வியாபிக்கப்பட்டிருக் கின்றது) என்னும் உபதேசத்திற்கும விருத்தம்.

"रामसुग्रीवयोरैक्यं देव्येवं समजायत"

[ராமனுக்கும் ஸுக்ரீவனுக்கும் ஐக்யம் இவ்வாறு உண்டாயிற்று] என்னுமிடத்திற்போல, இவ்விடத்தில் '**एकत्वम्**' என்னும் பதம் கேவ லம் ஒரு ஸம்பந்த விசேஷத்தைக் காண்பிக்கின்றது என்றே அறிதல் வேண்டும்.

स पर्यगाच्छुक्रमकायमव्रण
मस्नाविरं शुद्धमपापविद्धम् ।
कविर्मनीषी परिभूः स्वयंभूः
याथातथ्यतोऽर्थान् व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः ॥ ८॥

---

(8) 'தத்வம் இரண்டு, அவையாவன:—ஈஶன் ஈஶித்வ்யவஸ்து என்பவை. தன்னைத்தவிர்த்த மற்றை வஸ்துக்களெல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்து தரித்து நியமித்து வருகிறவன் ஈஶன்; அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்டு தரிக்கப்பட்டு நியமிக்கப்பட்டு வருமவையெல்லாம் ஈஶித்வ்யங்கள்'. இந்தத் தத்வஸ்திதி முன் மந்த்ரங்களிலேயே ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றது; இந்த ஸ்திதியை அறிந்தவனும் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறான். மறுபடியும் அந்தத் தத்வங்களின் ஸ்வரூபத்தை ஒருவாறு விளக்கிக் கொண்டு, இந்த மந்த்ரம் அந்தத் தத்வங்களை அறிந்தவனை விஶேஷித்துப் பேசுகின்றது.

[ப ஶா.] **सः**—அவன் [அதாவது - ஸர்வ பூதங்களுக்கும் அந்தராத்மாவாக இருக்கும் ப்ரஹ்மத்தை அறிந்தவன்], **शुक्रम्** - வெளுப்பாயும் [அதாவது - ஸ்வப்ரகாசரூபமாயும்], **अकायम्** - ஶரீரமற்றவனையும் [அதாவது - கர்மத்தால் ஏற்படும் அழுக்கு உடம்பு அற்றவனையும்], **अव्रणम्** - க்ஷதி அற்றதாயும் [கர்மத்தால் ஏற்படும் ஶரீரமில்லையாதலால் எவ்வித விகாரமு மற்றதாயும்], **अस्नाविरम्** - மாம்ஸம் அஸ்தி முதலிய ஹேய பதார்த்த ஸம்பந்தமற்றதாயும், **शुद्धम्** - அஜ்ஞாந ரூபமான தோஷமற்றதாயும், **अपापविद्धम्** - புண்ய பாபரூபங்களான கர்மங்களால் தொடப்படாததாயும், [இப்படி எவ்வித ஹேயகுண ஸம்பந்த லேஶமு மற்றதாயிருக்கும் பரமாத்மாவை] **पर्यगात्** - அடைகிறான். இவ்வாறு ஶுத்தமாயிருக்கும் பரமாத்மாவை அடையும் ஜீவனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களைச் சொல்லுகின்றது அடுத்துவரும் வாக்யம்]. **कविः**—மற்ற ஒருவருக்கும் எட்டாமல் இருக்குமவை யெல்லாவற்றையும் நன்றாகப் பார்க்கக்கூடிய திறமையுடையவனையும், **मनीषी** - புத்தியை உடையவனையும் [அதாவது - பகவத் குணங்களுடைய த்யாந மஹிமையால் இதர விஷயங்களில் வைராக்ய முண்டாகி அதனால் அடக்கப்பட்ட மநஸ்ஸை உடையவனையும்], **परिभूः**— [பெரிய ஶத்ருக்களாயிருக்கும் காமம் க்ரோதம் முதலியவைகளை] ஜயித்தவனையும், **स्वयंभूः**—[மற்ற ஒன்றையும் அபேக்ஷியாமல்] ஸ்வயமாகவே இருப்பைப் பெற்றவனையும், [இவ்வாறு இருந்து கொண்டிருக்குமவன்] **अर्थान्**.—[மோக்ஷம் அதைப் பெறக்கூடிய உபாயம் அதைத் தடுக்கும் விரோதிகள் இம்மாதிரியான] ஸகல பதார்த்தங்களையும், **याथातथ्यतः**—உள்ளபடி, **शाश्वतीभ्यः समाभ्यः**—ஸகல காலங்களிலும் [அதாவது - ப்ரஹ்மத்தை அடையும் பர்யந்தம்], **व्यदधात्** : விவேசித்து ஹ்ருதயத்தில் தரித்துக் கொண்டிருக்கிறான்.

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—7—'42 to 31—7—'42

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

No.	Name	Rs.
1.	Sri C. R. Krishnamachari, Cuddalore..	3
2.	,, S. Ramaswami Iyengar, Pallavaram ...	3
3.	,, V. Lakshminarasimhachariar, Trivellore ...	2
4.	,, K. T. Varadachari, Tuticorin, ...	1/8
5.	,, K. Narayana Iyengar, Kambayanatham ...	3
6.	,, S. Raghavachari, Gopalasamudram.	3
7.	,, R. Srinivasagopalachariar, Puddukottah ...	3
8.	,, R. Krishnaswami Iyengar, Cuddalore ...	3
9.	,, N. S. Vijayaraghavachari, Negapatam ...	3
10.	,, V. T. Desikachari, Viravanallur...	3
11.	,, C. V. Rangachari, Bangalore ...	3
12.	,, Ragu-Narasimhachariar, Karnappakkam ...	1
13.	,, T. Srinivasachariar, Saidapet ...	1
14.	, M. Sadagopachari, Oragadam ...	3
15.	,, Acha-Srinivasaraghava Iyengar, Uthiramerur ...	3
16.	,, U. Chakravarthiachary, Srirangam.	3
17.	,, The Librarian Annamalai University, Chidambaram ...	3
18.	,, Seshachariar, Thirukkannamangai ...	3
19.	,, K. Desiyamaiyangar, Sreemushnan ...	1/8
20.	,, K. S. Gopalaswami Iyengar, Mylapore ...	3
21.	,, M. Doraiswami Iyengar, Sembiam ...	1/8

(1) [இந்த ஸஞ்சிகையுடன் எட்டு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. இதுவரையில் சந்தாவைச் செலுத்ாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்படவில்லை.

(2) சென்ற மாஸத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டச் சந்தாதாரர்களின் பெயர்களுள், அதற்கு முன் மாஸத்திய ஜாபிதாவில் சேர்க்கப்பட்டிருந்த இரண்டு பெயர்கள் மறுபடியும் தவறி குறிக்கப்பட்டிருக்கின்றன.]

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்

1. இந்தப் பத்திரிகையின் வருஷச் சந்தா ரூபா 3. இப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் இந்த ஆபீஸ் விலாஸத்திற்கு எழுதிப் பத்ரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. வருஷச் சந்தாவை முன் பணமாகக் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாதாரர்கள், பத்ரிகைக்காக மனுச் செய்துகொள்ளும் காலத்தில், தங்களுடைய விலாஸத்தைப் பூர்ணமாக எழுதி அனுப்புதல் வேண்டும். பிறகு விலாஸம் எப்பொழுதாவது மாறினால், அந்த மாறுதலையும் உடனே பத்ரிகை ஆபீஸுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

3. சந்தாதாரர்கள் ஆபீஸுக்கு எழுதும் கடிதங்கள் எல்ல[illegible] வற்றிலும், தங்கள் பெயருடன் தங்கள் ரிஜிஸ்தர் நம்பரையும் எழு[illegible] ப்ரார்த்திக்கிறோம். அந்த நம்பர் அச்சிட்ட விலாஸத்தில் காணப்[illegible]

Regd. No. M. **4437**

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

இது ஸ்ரீ அஹோபில மடத்தால் ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும் பத்ரிகை. இதன் நோக்கங்களாவன :—

1. ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஆஸ்திக்யத்தை வ்ருத்தி செய்வது.

2. ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதத்தின் விசேஷ தத்வங்களைப் பற்றி தத்வ வித்துக்களின் ஸஹாயத்தைக்கொண்டு வ்யாஸங்களை வெளிப்படுத்துவது.

3. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் நடைபெறும் நித்யோத்ஸவாதிகளைப்பற்றியும் மற்றும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தங்களாக அப்பொழுதைக் கப்பொழுது நடைபெறும் வ்ருத்தாந்தங்களைப் பற்றியும் குறிப்புக்களை ஸங்க்ரஹிப்பது.

4. வைதிகாசாரம் வேதோக்த மதம் இவைகளைக் காப்பாற்றுவதற்கு வேறு உபாயங்களைத் தேடுவது.

5. இவைபோன்ற மற்றை கார்யங்களைச் செய்வது.

விளம்பரம் :— இந்தப் பத்ரிகையில் விளம்பரங்களுக்குப் பின் கூறப்பட்டுள்ள விதம் சார்ஜு வஸூலில் செய்யப்படும்.

(1)	முழுப்பக்கம் ஒருதடவைக்கு			ரூ.	4—0—0
(2)	௸	3	மாஸங்களுக்கு	,,	10—0—0
(3)	௸	6	,,	,,	18—0—0
(4)	௸	12	,,	,,	34—0—0

பாதிப் பக்கத்திற்குப் பாதி சார்ஜும், கால் பக்கத்திற்கும் அதற்குக் குறைந்த பாகத்திற்கும் கால் சார்ஜும் செய்யப்படும். சார்ஜு முழுவதையும் முன்பணமாகவே செலுத்த வேண்டும்.

=====: ஆபீஸ் விலாஸம் :=====

5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், மதராஸ்.

---

by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.